MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு

**Religion of Sangam Period Tamils - A re-examination**

**ந. தட்சணாமூர்த்தி** M.A (தமிழ்), **அஞ்சல்துறை கணக்கு அதிகாரி** (ஓய்வு), **பட்டுக்கோட்டை**
**மின்னஞ்சல்:** ndmoorthy30@gmail.com **ORCHID ID:** https://orcid.org/0009-0004-5055-1713
**N. Dakshinamoorthy M.A (Tamil), Accounts Officer (Retired), Dept. of Posts, Pattukottai**

DOI 10.5281/zenodo.17093295.

**Abstract:**

Many scholars have written many different views about the religion of ancient Tamils. We can know clearly about the religious position of Sangam period Tamils from the Sangam literature and Tolkappiyam. This article examines the views of various scholars and the important mentionings found in the Sangam literature and Tolkappiyam.

**Key words:** Sangam literature - Tolkappiyam - Vedas- Brahmins - Deities - Temples - Worships.

**முன்னுரை:**

பழந்தமிழரின் சமயம் பற்றிய பல்வேறு மாறுபட்ட கருத்துகளைப் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ளனர். ஒரு இனம் தன்னுடைய உண்மையான வரலாற்றை அறிதல் மிகவும் தேவை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது . ஆனால் பழந்தமிழரின் சமயம் பற்றிப் பல்வேறு மாறுபட்ட கருத்துகள் இருப்பது , சிறப்பு வாய்ந்த தமிழினம் தன் உண்மை வரலாற்றை சரிவர அறியவில்லை எ ன்பதையே காட்டுகிறது . ஏன் இத்தனை மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்பது ஆராயத்தக்கது. தமிழில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமுமே பழங்காலத் தமிழர் சமுதாயத்தைப் பற்றி நாம் அறியக் கிடைக்கும் இலக்கியங்கள் ஆகும் . அவற்றுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்கள் எதுவும் கிடைக்கவில் லை. சங்க இலக்கியங்களில் தமிழர்கள் பின்பற்றிய சமயம் பற்றி மிகப்பல தெளிவான சான்றுகள் உள்ளன . விருப்பு, வெறுப்பு இன்றி , வேறு கொள்கைச் சார்புகள் இன்றி , ஏரணத்துக்கு (logic) முரண்படாமல், தன் கருத்துகளைத் திணிக்காமல் , உள்ளது உள்ளபடி மட்டுமே அவற்றை ஆராய்ந்தால் உண்மை நிலையைத் தெளிவாக அறியலாம் . அத்தகைய ஒரு முயற்சியே இக்கட்டுரை.

**வரலாற்றுப் பின்னணி**:

இவ்வாறு பலவிதக் கருத்துகள் தோன்றுவதற்குக் காரணமான வரலாற்றுப் பின்னணியை அறிதல் மிகவும் தேவையான ஒன்று . தமிழ்நாட்டில் கி.பி. 1900 ஐ ஒட்டி பெரும் கருத்து மாற்றங்கள் ஏற்பட்டன. நீதிக்கட்சி எனப்படும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பிராமணர் அல்லாதார் சங்கம் அக்காலத்தில் வேலைவாய்ப்பில் நிலவிய பிராமணர் ஆதிக்கத்துக்கு எதிராகத் தோன்றியது . பிராமணருக்கு எதிரான கருத்துகள் வலுப்பெற்றன . தமிழறிஞர்களிடமும் பெரும் கருத்து மாற்றங்கள் ஏற்பட்டன. அக்காலத்துக்கு முன் வடமொழிக் கலப்பால் தமிழ் பெரிதும் சீர்குலைந்திருந்தது . பரிதிமால்கலைஞர் உருவாக்கிய தனித்தமிழ் இயக்கம் மறைமலையடிகளால் பெரிதும் வளர்ச்சியுற்றது. இதனால் தமிழறிஞர்கள் ஏறத்தாழ அனைவருமே வடசொற்களை நீக்கித் தமிழைத்



http://Creativecommons.org//license/by/4.0/.

தூய்மை செய்வதில் பெரிதும் முனைப்பு கொண்டனர். இது தமிழின் நற்பேறு என்றே கூற வேண்டும். அந்த வகையில் மறைமலையடிகளுக்குத் தமிழ் உலகம் பெரிதும் நன்றிக்கடன்பட்டுள்ளது . இம்முயற்சியால் தமிழ் தூய்மையும் சிறப்பும் பெற்றது. தமிழுணர்வு மேலோங்கியது. எனினும் இதன் துணைவிளைவு ஒன்றும் ஏற்பட்டது . தமிழ் சீர்குலைந்ததற்கு வடமொழியும் , வடவருமே காரணம் என்று எண்ணி பல தமிழறிஞர்கள் வடமொழி மீதும் , ஆரியர் எனப்படுவோர் மீதும் , அவர்களின் தொடர்புடையவர் என்று கருதப்படும் பிராமணர் மீதும் கடுமையான வன்மம் கொண்டனர் . இதன் சரிமைத்தன்மை பற்றி ஆராய்வது இக்கட்டுரைக்கு அப்பாற்பட்டது. இக்காலக்கட்டத்தில் சிங்காரவேலர் மூலம் தமிழ்நாட்டில் பொதுவுடைமைக் கொள்கை (Communism) வலுப்பெறத் தொடங்கியது. இப்பொதுவுடைமைக் கொள்கை என்பது பொருள்முதல்வாதம் (Materialism) என்ற நாத்திகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது . அதே சமயத்தில் பெரியார் ஈ . வெ. ரா நாத்திகக் கொள்கையை வலுவாகப் பரப்பத் தொடங்கினார் . இவை இரண்டும் இந்து மதத்தைக் கடுமையாக எதிர்த்தன . இந்துமத எதிர்ப்புக் கொள்கை கொண்டவர்கள் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறிய பல கருத்துகளைக் கைக்கொண்டு இந்து மதத்தையும் பிராமணர்களையும் தாக்கினார்கள். மறைமலையடிகள், கா. சு. பிள்ளை, திரு.வி.க போன்ற தமிழறிஞர்கள் பலர் தீவிர சைவப் பற்றுடையவர்கள். எனினும் ஆரியம், பிராமணர் மீது கொண்ட எதிர் உணர்வால் அவர்களும், நாத்திக இயக்கத்தினரும் , பொதுவுடைமை இயக்கத்தினரும் இணைந்தே செயல்பட்டு வந்தனர் . இன்று வரை அந்த நிலையின் தொடர்ச்சியைக் காண முடிகிறது. சைவம் என்பது வேதத்தில் இருந்து உருவாகி வந்தது என்பது வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் சமய அறிஞர்கள் கூறும் கூற்று . மறைமலையடிகள் போன்ற தமிழறிஞர்கள் சைவத்தையும் . தமிழையும் மிகவும் போற்றினர் . அதே சமயத்தில் வேதத்தையும் , ஆரியம் எனப்படும் சமஸ்கிருதத்தையும் கடுமையாக எதிர்த்தனர் . இதனால், ‘தமிழர்கள் தனியான மதம் உடையவர்கள் ’, ‘சைவம் தமிழர்களின் மதம் ’, ‘சைவம் இந்து மதத்துக்கு வேறுபட்டது ’, ‘ஆரியம் தமிழுக்கு எதிரி ’ என்பன போன்ற பல கருத்துகள் தோன்றின . ஆரியர் இந்தியாவுக்கு வரும்போது சிந்து வெளியில் வாழ்ந்தவர் தமிழரே என மறைமலையடிகள் கொண்டார். அங்கு வாழ்ந்தவர் தொல்திராவிடர் (தமிழர், தெலுங்கர், கன்னடர் முதலிய மக்களின் மூதாதையர்) என்பதைப் பல அறிஞர்கள் ஒப்புவர் . ஆனால் அவர்களில் எவரும் அங்கு வாழ்ந்தவர் தமிழர் என்று ஏற்க மாட்டார்கள் . இரண்டுக்கும் பெ ரும் வேறுபாடு உண்டு . மறைமலையடிகள் பின்வருவன முதலான பல கருத்துகளைக் கூறினார் : ‘ஆரியர் வரும்போது அங்கு தமிழர்கள் செழிப்பாக வாழ்ந்தனர் ; நாடோடிகளாய், பஞ்சை பராரிகளாய் வந்த ஆரியருக்குத் தமிழர்கள் இரக்கப்பட்டு உணவு , உடை, உறையுள் கொடுத்துக் காத்தனர் . ஆனால் ஆரியர் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தனர். அவர்கள் வஞ்சனை , சூழ்ச்சி, பொய், புரட்டு ஆகியவையே வடிவானவர்கள் . சூழ்ச்சிகள் பல செய்து தமிழரை பிளவுபடுத்தி பல சாதிகளை ஏற்படுத்தினர். தாங்களே உயர்ந்தவர்கள் என்று கூறி தமிழரை அடிமைப் படுத்தினர் . பல பொய், புரட்டுக் கதைகளை உருவாக்கித் தமிழரை ஏமாற்றினர். ஆரியர் தொடர்பு தமிழுக்கும் தமிழருக்கும் ஆகவே ஆகாது ’. இப்படிப் பலவற்றைக்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

கூறிய மறைமலையடிகள் [1] சங்க இலக்கியங்களிலும் , சைவத் திருமுறைகளிலும் வேதமும் , அந்தணர்களும் மிக உயர்வாகக் கூறப்பட்டிருப்பதைக் கண்டு ஒரு புதிய கருத்தைக் கூறினார். பழந்தமிழ் இலக்கியங்களில் மறை என்று கூறப்பட்டிருப்பது ஆரிய வேதம் அல்ல ; தமிழ் நான்மறைதான் அது ; அந்தணர் என்று கூறப்பட்டுள்ளோர் ஆரிய பிராமணர் அல்லர் ; தமிழரான அந்தணரே அவர்கள் என்று அவர் கூறினார். அவருக்கு நெருக்கமான கா. சு. பிள்ளை, 'திருநான்மறை விளக்கம்' என்ற பெயரில் இதை விளக்கி ஒரு கட்டுரைத் தொடரை எழுதினார். ஆனால் அறிஞர் மா. சாம்பசிவம்பிள்ளை இதை முற்றிலும் மறுத்து , 'திருநான்மறை விளக்க ஆராய்ச்சி ' என்ற நூலை விரிவாக எழுதி வெளியிட்டார் [2]. மறைமலையடிகளோ, கா.சு.பிள்ளையோ கடைசிவரை அந்நூலை மறுக்க முடியவில்லை. எனினும் அக்காலம் முதல் இக்காலம் வரை தமிழறிஞர்கள் பெரும்பாலோர் மறைமலையடிகளைப் பெருமளவோ, சிறிதளவோ பின்பற்றுபவர்களாகவே உள்ளதால் சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றில் காணப்படும் சமயக் கருத்துக்களுக்கு முடிந்தவரை மறைமலையடிகள் வழியில் ஆரிய எதிர்ப்பான விளக்கம் கொடுக்க அவர்கள் முனைவதைப் பெரிதும் காண முடிகிறது. மறைமலையடிகளுக்குப் பிறகு தேவநேயப் பாவாணரும் இத்தகைய பல ஆரிய எதிர்ப்புக் கருத்துகளைக் கூறினார் . இக்கருத்துகளின் செல்வாக்கு இன்றும் தமிழறிஞர்களிடம் பெருமளவில் உள்ளது.

**பல்வேறு மாறுபட்ட கருத்துகள்:**

பழந்தமிழருக்கு சமயமே கிடையாது எனச் சிலர் கூறுவர். இவர்கள் பெரும்பாலும் சமயத்தை எதிர்க்கும் நாத்திகக் கொள்கை உடையவர்கள் . ஆனால் சங்க இலக்கியங்களில் உள்ளவை இக்கருத்துக்கு முற்றிலும் எதிராக உள்ளன . ஆரியர் வருகைக்கு முன்பு தமிழர் சமயம் இல்லாமல் இருந்தனர்; ஆரியரே சமயத்தை தமிழரிடையே புகுத்தினர் என்று பலர் கூறுவர் . ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழரின் சமயநிலை பற்றிய எந்தச் சான்றும் இல்லை . எனவே இது ஆதாரமில்லாமல் கற்பனையாகக் கூறப்படும் கூற்று . சிலர் தமிழர் இயற்கையையே வழிபட்டனர் என்பர் . ஆரியர் இயற்கையை வழிபட்டனர் என்று கூ றுவதில் பொருள் உண்டு. அவர்கள் சூரியன், சந்திரன், வாயு, தீ முதலியவற்றை வணங்கினர் என்பதை ரிக் வேதத்தின் மூலம் அறிகிறோம் . உண்மையில் அவர்கள் இயற்கைப் பொருட்களை வணங்கவில்லை ; அவற்றை செயல்படுத்தும் தெய்வ சக்திகளையே வணங்கினர். ஆனால் தமிழ் இலக்கியத்தில் அப்படி இல்லை . வேதகாலத்தின் தொடர்ச்சியாகத் தோன்றிய புராணகால இந்துமதத்துக்கு உரிய தெய்வங்களே , முதன்மையாக, தமிழ் இலக்கியத்தில் வணங்கப்பட்டன. இயற்கை வழிபாடு காணப்படவில்லை . நீர்த்துறை, மரங்கள் முதலியவற்றில் வணங்கப்பட்டவை அங்கு உறைந்த தெய்வங்களே. சிலர், 'கல்லே பரவின் அல்லது நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே ' (புற. 335:11-12) என்ற பாடலை மட்டும் சுட்டிக்காட்டி வீரர்களுக்கு நட்ட நடுகல் வழிபாடு மட்டுமே தமிழர் சமயம் என்பர் . பல்வேறு தெய்வங்களை வணங்குதல் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் நிறைந்துள்ள நிலையில் இவ்வாறு கூறுவது , யானையின் வாலைக் காட்டி யானை கயிறு போன்றது எனக் கூறுவதை ஒக்கும் . சிலர் முன்னோர் வழிபாடே தமிழர்


http://Creativecommons.org//license/by/4.0/.

வழிபாடு என்பர். சிலர் சிறுதெய்வ வழிபாடு மட்டுமே தமிழர்க்கு உரியது என்பர். ஆனால் சங்க இலக்கியம் காட்டுபவை இக்கருத்துகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளன. சில அறிஞர்கள் சங்க காலத்தில் வைதிகம், சமணம், பௌத்தம் மூன்றும் தமிழரிடையே செல்வாக்கு பெற்றிருந்தன என்பர். பௌத்தமே தமிழரின் ஆதிமதம் என்று கூறியவர்களும் உண்டு. சமணமே தமிழர் சமயம்; பின்பே வைதிகம் வந்தது என்று கூறியவர்களும் உண்டு. ஆசீவகமே பழந்தமிழர் சமயம் என்று கூறுபவர்களும் உண்டு. பழந்தமிழருக்கும் இந்து சமயத்துக்கும் தொடர்பில்லை என்று வலியுறுத்தும் நோக்கத்திலேயே இத்தகைய முரண்பட்ட கருத்துகள் கூறப்படுவதை உணர முடிகிறது. பழந்தமிழரின் சமயநிலை பற்றி எழுதியுள்ள பல அறிஞர்கள் வைதிகத்துக்கும் சங்க இலக்கியக் கருத்துகளுக்கும் உள்ள தொடர்பை மிகவும் குறைத்துக் கூற முயன்றிருப்பதை நன்கு காண முடிகிறது. அவற்றை மறுக்க முடியாததால், 'அவை இருந்தன; ஆனால் அவை மக்களிடம் தாக்கம் பெறவில்லை; நிறுவனமாகவில்லை' என்றெல்லாம் பலவாறாகக் கூறுவர். தமிழர் சமயம் பற்றி, சில புகழ்பெற்ற அறிஞர்கள் கூறியுள்ள பல்வேறு கருத்துகளைக் கீழே காண்போம்.

**அறிஞர் கூற்றுகள்:**

**கனகசபைப் பிள்ளை:**

அறிஞர் வி. கனகசபைப் பிள்ளை மிகத் தொடக்க காலத்திலேயே 1904 ல் '1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' (The Tamils before 1800 years) என்ற ஆழ்ந்த, நுட்பம் நிறைந்த ஆங்கில நூலை எழுதியவர். அந்நூலில் அவர் கூறும் கருத்துகள் பலவற்றை தற்காலத்து அறிஞர்கள் ஏற்க மாட்டார்கள் என்றாலும் அந்நூல் சிறந்த ஒரு முன்னோடி நூல் என்பதை மறுக்க இயலாது. ஆங்கிலேயர் ஆட்சியின் செல்வாக்கால் அக்காலத்தில் பலர் ஆபிரகாமிய மதங்களின் ஒரே கடவுள் கொள்கையை உயர்வாகவும், இந்து மதத்தின் பல தெய்வக் கொள்கையைத் தாழ்வாகவும் கருதினர். அவரும் அத்தகைய கொள்கை கொண்டிருந்தார் என்பதை இந்நூலில் இருந்து அறிய முடிகிறது. அவர் சங்ககாலச் சமயநிலையைச் சித்திரிக்கும்போது, பிராமணர் சமயம் என்று ஒன்று தனியானது போலவும் தமிழர் சமயத்துக்கு அது வேறுபட்டது போலவும் சித்திரிக்கிறார். வேதம் என்பது 'மறை' எனக் கூறப்படுதல் பிராமணர்களால் அது தமிழ்மக்களிடம் இருந்து மறைத்து வைக்கப்பட்டதைக் குறிக்கும் என்று கூறுகிறார். ஆனால் உண்மையில் தெய்வீகம் என்ற மறைபொருளைப் பற்றியது என்பதாலேயே அது மறை எனக் கூறப்படுகிறது. 'தமிழ்நாட்டில் பிராமணர் தங்கள் வேதங்களை மக்கள் அறியாதபடி ஒளித்து வைத்ததால் மக்களால் வேதக்கருத்துகளை அறிய முடியவில்லை. எனவே பிராமணர் தங்கள் வேதத்தை விட்டு தமிழ் மக்களின் கடவுள்களான சிவன், கொற்றவை ஆகியோரை ஏற்க நேரிட்டது' என்று கூறுகிறார்[3]. வேதங்களில் தோன்றிய வைதிக சமயம் காலப்போக்கில் வளர்ச்சியும் மாற்றங்களும் பெற்றது. வேதங்களை அடுத்து புராணங்கள் தோன்றின. புராணங்களில் தெய்வங்களுக்கு பற்பல உருவக் கூறுகளைக் கற்பித்தலும், அவை பற்றிய உருவகக்கதைகள் கூறுதலும் தோன்றின. இவற்றின் அடிப்படையில் உருவ வழிபாடும் பூசை முறைகளும் தோன்றின. இவற்றின் தொடக்கநிலைகளை வேதத்திலேயே காணலாம். வேத, புராண


http://Creativecommons.org//license/by/4.0/.

அடிப்படையில் அமைந்த மதமே தற்காலத்தில் இந்து மதம் என்று கூறப்படுகிறது . புராணக் கருத்துகள் நன்கு வளர்ச்சி பெற்றுவிட்ட காலம் வியாசரின் காலம் என்று கருதப்படும் கி .மு. ஆயிரத்துக்கு முன் எனலாம் . ஆனால் சங்க நூல்கள் இக்காலத்துக்கு ஏறத்தாழ 1000 ஆண்டுகள் பிற்பட்டவை. சிவன், முருகன், காளி ஆகிய தெய்வங்கள் சங்க காலத்துக்கு நெடுங்காலம் முற்பட்ட வடமொழிப் புராணங்களில் உள்ளவை . சங்ககாலத் தெய்வங்களை சமகாலத்தில் வடநாட்டில் வழிபடப்பட்ட தெய்வங்களுடன் ஒப்பிட வேண்டுமே தவிர , பலரும் செய்வதைப் போல , காலத்தால் முற்பட்ட வேதத்துடன் ஒப்பிட்டு வேறுபடுத்திக் கூறக்கூடாது . கொற்றவை பழங்குடித் தெய்வம் என்று கூறி கொற்றவை வழிபாடு பற்றி அவர் காட்டும் சிலப்பதிகாரக் காட்சியில் (சிலப். 12:22-39)[4] முழுக்க முழுக்க வைதிக அடிப்படையிலேயே கொற்றவை கூறப் பட்டுள்ளாள்; வைதிகத்துக்கு மாறுபட்ட தமிழர் கடவுளாக அல்ல . எடுத்துக்காட்டாக, 'கங்கையை அணிந்த, நெற்றிக்கண் கொண்ட சிவனுக்கு இடப்பகுதியில் பெண்ணுருவாய் வேதங்கள் போற்ற நிற்பாய் ' எனக் கொற்றவை போற்றப்படுகிறாள். இவ்வாறே சிவன் , முருகன் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்க ள் வைதிக அடிப்படையிலேயே கூறியுள்ளன என்பதைப் பின்பு காண்போம் . 'பிராமணரின் கோவில்களில் ஆரவாரக் கவர்ச்சி இருந்ததே ஒழிய உண்மை பக்தி இல்லை ' என்று அவர் கூறுகிறார்[5]. இது அவரது ஒரே கடவுள் கொள்கைத் தற்சார்புநிலையைக் காட்டும் . கோயில் வழிபாடு என்பது மக்களுக்கு உரியது என்று அல்லாமல் பிராமணருக்கு உரியது போல் சித்திரிக்கிறார் . சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையை எரித்த போது நால்வகை வருணங்களுக்கு உரிய பூதங்களும் நகரை விட்டு நீங் குவதாகக் கூறப்பட்டுள்ளது. பிராமணர் தங்கள் நால்வருணக் கொள்கையை மக்கள் மனத்தில் இருத்துவதற்காகவே நால்வருண பூதங்களை படைத்துள்ளனர் என்று உள்நோக்கம் கற்பித்துக் கூறுகிறார்[6]. அக்காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் நால்வருண பூதங்களும் , சதுக்க பூதம் , கந்திற் பாவை போன் றவையும் அக்காலச் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டவை . பிராமணர் அக்காலச் சமுதாயத்தில் ஒரு அங்கமே தவிர மன்னரையும் , மக்களையும் மீறியவர்கள் அல்லர் . சிறு தொகையினரான பிராமணர் பெருந்தொகையினரான அவர்களை ஏமாற்றி தங்கள் கருத்துகளை ஏற்க வைத்தனர் என்றும் அவர்களும் முட்டாளாய் ஏற்றுக்கொண்டனர் என்றும் கூறுதல் ஒரு பொருத்தமற்ற கற்பனை . பழங்காலத்தைய விஷயங்கள் சில தமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அனைவரும் சேர்ந்து செய்த ஒன்றை பிராமணர் செய்த குற்றமாக அவர்கள் மேல் பழி போடுவது முறையல்ல.

**மறைமலையடிகள்:**

மறைமலையடிகள் தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆரியர் வருகைக் காலத்தைப் பற்றிய பல கருத்துகளைத் தனது 'வேளாளர் நாகரிகம்', 'தமிழர் மதம்', 'மாணிக்கவாசகர் காலமும் வரலாறும் ' முதலிய பல நூல்களில் கூறியுள்ளார் . தமிழரை மிகமிக உயர்வாகக் கருதுவது ம் ஆரியரையும் பிராமணரையும் மிகமிக இழிவாகக் கருதுவதும் அவர் கொள்கை . அவரது கருத்துகளில் பல



http://Creativecommons.org//license/by/4.0/.

தன்முரண்பாடு (self-contradiction) கொண்டவை. வசிட்டரை ஆரியர் என்பார்; விஸ்வாமித்திரரைத் தமிழர் என்பார். ரிக் வேத மந்திரங்களை மிகவும் இழிவுபடுத்திக் கூறுவார் . அதில் உள்ள காயத்ரி மந்திரத்தை உயர்வாகக் கூறுவார் . உபநிடதங்களில் கூறப்படும் மன்னர்களைத் தமிழர் என்பார் . உபநிடதங்கள் தமிழர் எழுதியவை என்பார் . தமிழர் ஏன் அவற்றைத் தமிழில் எழுதாமல் சமஸ்கிருதத்தில் எழுதினர் என்றால் அவர்கள் ஆரியருக்கு அறிவு புகட்டவே சமஸ்கிருதத்தில் எழுதினர் என்பார். ஆறு தரிசனங்களில் சாங்கியம் முதலிய ஐந்து தமிழர் செய்தது என்பார் . ஆனால் மிமாம்சை ஆரியர் செய்தது எனப் பழித்துரைப்பார் . வேதாந்தம் தமிழர் செய்தது என்பார் . ஆனால் வேதாந்தியான சங்கரரை மிகவும் பழித்துரைப்பார் [7]. மனு தமிழ் அரசன் என்பார் [8]. ஆரியர் வேதம் சிறுதெய்வங்களை வணங்குவது என மிகவும் பழித்துரைப்பார் . உண்மையில் பற்பல தெய்வங்களாக உள்ளது ஒரே பரம்பொருளே என்றே வேதம் கூறுகிறது . அவர் கருத்துகள் , ஆதாரமற்ற கற்பனைகளைக் கொண்டும் , கடுமையான விருப்பு . வெறுப்பின் அடிப்படையிலும் , வரலாற்று உண்மைகளுக்கு முரணாகவும் இருப் பதைக் காணலாம் . அந்தக் கருத்துகளின் அடிப்படையிலேயே தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சமயக் கருத்துகளை அவர் விளக்கியுள்ளார்.

**கா. சு. பிள்ளை:**

மறைமலையடிகளுக்கு மிக நெருக்கமான கா. சு. பிள்ளை தன், 'தமிழர் சமயம்' என்ற நூலில் பழந்தமிழ் நூல்களில் காணப்படும் தெய் வங்கள் தமிழருக்கே உரியன என்று கொள்கிறார் . தமிழகக் கோவில்களில் வேதக்கடவுள்கள் இல்லாமையால் கோவில்களில் உள்ளவை தமிழருக்கே உரியன என்பது போல் அவர் கூறுகிறார் [9]. வேதத்தை அடுத்து வடமொழியில் தோன்றிய புராணங்களில் உள்ளவையே அத்தெய்வங்கள் என்பதையும் , தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் இத்தெய்வங்கள் வணங்கப்படுகின்றன என்பதையும் அவர் வசதியாக மறந்துவிடுகிறார்!

**சிவராஜப்பிள்ளை:**

கே. என். சிவராஜப்பிள்ளை தன், 'The Chronology of Early Tamils' என்ற நூலில் ஆரியர் வருகைக்கு முன் தமிழகத்தில் சமயம் என்பதே இல்லை என்றும் சமணரும் பௌத்தருமே முதலில் வந்த ஆரியர் என்றும் அவர்கள் வரும் போது இங்கு வைதிகம் இல்லை என்றும் கூறுகிறார் . கரிகால்சோழனுக்கு முன் தமிழ்நாட்டில் வேள்வி என்றால் என்னதென்றே தெரியாது என்றும் கரிகாலனும் முதுகுடுமிப் பெருவழுதியும் வேள்வி செய்ய சில ஆரியரை அழைத்து வந் தனர் என்றும் அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றும் அதன்பின் ஆரியம் தமிழ்நாட்டில் சிறிதுதான் செல்வாக்கு பெற்றது என்றும் பல்லவர் காலத்தில்தான் அது முழு செல்வாக்கு பெற்றது என்றும் கூறியுள்ளார்[10].

**பாவாணர்:** தேவநேயப்பாவாணர் தனது , 'தமிழர் மதம்' என்ற நூலில் ம றைமலையடிகள் போலவே தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் உள்ளவற்றைக் கொண்டே அவற்றுக்கு மிக முற்பட்ட காலத்தைய வேதங்களைப் பற்றிய கருத்துகளைக் கூறுகிறார் . தொல்காப்பியத்தில் கூறப்படும் வேந்தன் என்ற தமிழ்க் கடவுளையே ஆரியர் இந்திரன் என்ற தங்கள் கடவுள் ஆக்கின ர்


http://Creativecommons.org//license/by/4.0/.

என்கிறார்[11]. ஆரியர் இந்தியா வருவதற்கு முன்பே அவர்களின் முக்கிய தெய்வம் இந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மிகக் கடுமையான ஆரிய , பிராமண வெறுப்பு கொண்டவர் என்பதால் பல வன்மையான ஆரிய, பிராமண எதிர்ப்புக் கருத்துகளைக் கூறியுள்ளார் . 'பிராமணர் தாம் நிலத்தேவர் என்றும் தங்கள் மொழி தேவமொழி என்றும் கூறி தமிழ் மூவேந்தரையும் அடிமைப்படுத்தினர் . நால்வருணப் பாகுபாட்டைப் புகுத்தி ஒற்றுமையாக இருந்த மக்களிடையே உயர்வு தாழ்வை உருவாக்கி தாமே உயர்ந்தவர் எனக் கூறிக்கொண்டனர் . பல சூழ்ச்சிகள் செய்து பொய் , புளுகுக் கதைகளைக் கூறி தமிழ் மன்னர்களையும் மக்களையும் ஏமாற்றினர் ; மன்னர்கள் பேதைமை , மதப்பித்து, கொடைமடம் காரணமாக ஏமாந்தனர்; இவ்வாறு செய்துதான் பிராமணர் சிறப்பு பெற்றனர் என்பார்[12]. ஆரியர் தமிழரின் பிறவிப் பகைவர் என்பது அவர் கொள்கை . அவர்கள் சமஸ்கிருதத்தைப் புகுத்தி தமிழை அழித்தனர்; தமிழரையும், தமிழருடையவற்றையும் தாழ்த்தினர்; தமிழரின் எண்ணற்ற தொன்னூல்கள் வடமொழியில் மொழிபெயர்க்கபட்ட பின் அழிந்தும் அழிக்கப்பட்டும் போயின என்றெல்லாம் கூறுவார் [13]. ஆரியம் தமிழகத்துக்கு வந்தது கி .மு 1200 ல் என்று கூறும் அவர் (மேற்கோள் - 40) தொல்காப்பியர் காலம் கி.மு 700 என்று கூறுகிறார். தொல்காப்பியர் காலத்திலேயே ஆரியம் தமிழகத்தில் ஓரளவு வேறூன்றி விட்டது என்கிறார் . ஆனால் இந்த இடைக்காலத்தில் பண்டைத் தமிழ் நூல்கள் எல்லாம் ஆரியரால் அழியுண்டும் மறையுண்டும் போயின என்கிறார் ![14] ஓரளவே செல்வாக்கு பெற்ற ஒரு மிகச்சிறு தொகையினர் தமிழர் நூல்களை எல்லாம் அழிக்கும் போது அறிவிலும், நாகரிகத்திலும் சிறந்த பெரும்பான்மைத் தமிழ்மக்கள் ஏன் வேடிக்கை பார்த்தனர் என்ற கேள்வி எழுகிறது ! பலர் இவர் கூற்றின் அடிப்படையில் , ஆரியர் தமிழர் நூல்களைத் திருடித் தங்களதாக்கிக் கொண்டு மூலத் தமிழ் நூல்களை அழித்துவிட்டனர் என்பர் . இத்தகைய கருத்துக்களைக் கூறுவதற்கு ஆதாரமாக எந்த ஒரு கருத்தும் தமிழ் நூல்களில் இல்லை . எனவே இவை முற்றிலும் கற்பனையானவை என்று அறியலாம் . பழந்தமிழ் மன்னர்களும் மக்களும் அந்த அளவு அறிவற்றவர் அல்லர் . உண்மையில், இவ்வாறெல்லாம் கூறுதல் மிக உயர்ந்து விளங்கிய தமிழ் மன்னர்களையும் மிகுந்த உயர்வுடன் வாழ்ந்த பழந்தமிழ் மக்களையும் சொந்த அறிவற்ற முட்டாள்கள் போலக் கூறி இழிவு படுத்துவதாகும். மறைமலையடிகள், பாவாணர் போன்றோர் கூறும் இவ்வாறான ஆதாரமற்ற , கற்பனையான பிராமண , ஆரிய எதிர்ப்புக் கருத்துகள் ஆங்கிலேயர் வருகைக்கு முன் தமிழ்நாட்டில் அறவே இல்லாதவை என்பதும் எந்தத் தமிழ் இலக்கியத்திலும் இத்தகைய கருத்துகள் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை.

**கைலாசபதி:**

அண்மைக்கால அறிஞர்களில் கைலாசபதி , வானமாமலை, கார்த்திகேசு சிவத்தம்பி, கே. கே. பிள்ளை ஆகியோரின் கருத்துகள் குறிப்பிடத் தக்கவை . இவர்களின் கருத்துகளைத் தற்காலத்தில் பலரும் பின்பற்றுவதைக் காண முடிகிறது . பொதுவுடைமைக்கொள்கை சார்ந்த அறிஞர்கள், பொதுவாக, பொதுவுடைமைக்கொள்கைக் கருத்துகளான இனக்குழு , வர்க்கம், தனியுடைமைச் சமுதாயம், தாய்வழிச் சமூகம் , வர்க்கப் போராட்டம் முதலிய நோக்குகளில் பழந்தமிழர்


http://Creativecommons.org//license/by/4.0/.

சமுதாயத்தையும் அணுகுவது வழக்கம். மேலும் அவர்கள் தங்கள் சமய எதிர்ப்புக் கொள்கைச்சார்புக்கு ஏற்றவாறே சங்ககாலச் சமயநிலை பற்றி எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. அந்த வகையில் அறிஞர் கைலாசபதி கூறும் கருத்துகளைக் காண்போம். அவர் பெண் தெய்வ வழிபாடுதான் தமிழர்களுக்குத் தலையாயது என்கிறார். அடுத்தபடியாக முருகன் தமிழர்களின் கடவுள் என்கிறார். கொற்றவைசிறுவன் என்று கூறப் படுவதால் அவன் தாய்வழிச்சமூக உரிமை பெறும் திராவிடத் தெய்வம் என்கிறார்[15]. சிவன் அவ்வளவாக செல்வாக்கு பெறவில்லை என்கிறார். சிவ, விஷ்ணு வழிபாடு கி .பி 3, 4 ஆம் நூற்றாண்டுகளில்தான் செல்வாக்கு பெற்றது என்கிறார். மேலும் நாகரிகத்தில் சிறந்த சங்ககாலச் சமுதாயத்தை அவர் ஒரு இனக்குழுச் சமுதாயமாகவே கருதுகிறார்[16]. கிமு 5 ஆம் நூற்றாண்டு அளவில் ஆரியர் தொடர்பு ஏற்பட்டது என்றும் அரசர், வணிகர் போன்ற உயர்ந்தோர் ஆரிய தெய்வங்களை வணங்கியதாகவும் பொதுமக்கள் கொற்றவை, முருகன் ஆகிய திராவிடத் தெய்வங்களை வணங்கியதாகவும் கூறுகிறார்[17]. அக்காலத்தில் திராவிடரின் வழக்கமும் ஆரியரின் வேத வழக்கமும் முட்டி மோதிக் கலப்பதை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன என்கிறார்[18]. ஆனால் அப்படி எந்த முரண்பாடும் மோதலும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை என்பதைப் பின்னர்க் காண்போம்.

**வானமாமலை:**

அறிஞர் வானமாமலையும் இதே போன்ற கருத்துகளைத் தனது, 'தமிழர் பண்பாடும் தத்துவமும்', 'தமிழர் வரலாறும் பண்பாடும்' என்ற நூல்களில் கூறுகிறார். தமிழர் தாய்வழி இனக்குழுச் சமூகத்தினர் என்றும் கொற்றவை என்ற தாய்த்தெய்வமே தமிழர் தெய்வம் என்றும் முருகன் என்ற தமிழர் தெய்வம் அவள் மகன் என்றும் ஆரிய தெய்வங்களுடன் இவை இணைக்கப்பட்டன என்றும் கூறுகிறார்[19]. இனக்குழுச் சமூகமாகவும், வேட்டைச் சமூகமாகவும் நாகரிகமற்று இருந்து பின்பு நாகரிகச் சமூகமாக மாறும் தொடக்க காலமே சங்ககாலம் என்பது போல இவரும் இவரைப் போன்ற அறிஞர்களும் கொள்கின்றனர். அகம், புறம், குறுந்தொகை, நற்றிணை முதலிய பழைய நூல்களில் உள்ள பழமையான முருகன் வழிபாடு வேறு, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய பிற்கால நூல்களில் உள்ள முருகன் வழிபாடு வேறு என்று இவர் கூறுகிறார்[20]. இது பற்றிப் பின்னர்க் காண்போம். முருகன், சிவன், கொற்றவை ஆகியோர் தமிழர் தெய்வங்கள் என்றும் அவை ஆரிய தெய்வங்களோடு இணைக்கப்பட்டன என்றும் கூறப்படும் கருத்து ஆராயத்தக்கது. வைதிகம் தமிழகத்துக்கு வருமுன் இருந்த நிலை பற்றி நமக்குத் தெரிந்தால்தான் இவ்வாறான எந்த முடிவுக்கும் நாம் வரமுடியும். ஆனால் வைதிகம் வருவதற்கு முற்பட்ட தமிழர் நிலை பற்றிய சிறு சான்றும் நம்மிடம் இல்லை. தொல்காப்பியத்துக்கும் சங்க இலக்கியங்களுக்கும் முற்பட்ட இலக்கியங்கள் எதுவும் கிடைக்காத நிலையில், அப்பழங்காலத்து சமூகநிலை, தெய்வங்களின் தோற்றம், மாற்றம் பற்றி எல்லாம் ஆதாரமின்றிக் கூறுவது வெறும் ஊகக்கருத்துகளே. ஊகங்களையே உண்மைகளாகக் கருதுதல் ஏற்கத்தகாதது. வைதிகம் வந்து நிலைபெற்று பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய சங்க இலக்கியத்தில் காணப்படுகின்ற,


http://Creativecommons.org//license/by/4.0/.

சிற்றூர்களில் பின்பற்றப்பட்ட ஒரு சில கூறுகளைக் கொண்டு அவை ஆரியத்துக்கு வேறுபட்டவை ; பழந்தமிழருக்கே உரியன எனக் கூறுதல் பொருந்தாத ஒன்று . இன்றும் நகர மக்களிடமும் சிற்றூர் மக்களிடமும் உள்ள வழிபாட்டு முறைகளில் பல வேறுபாடுகள் உள்ளன . ஆயிரக்கணக்கான ஆண்டு வரலாறு கொண்ட இந்து மதத்தில் பல்வேறு பிரிவுகள் , பல்வேறு முறை கள் காலப்போக்கில் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, இறைவழிபாட்டுக்கு மது , மாமிசம், மங்கை ஆகியவற்றை வழியாகக் கொண்ட சைவப்பிரிவு கூட இருந்துள்ளது . அதற்காக அந்த சிவன் வேறு , தற்காலக் கோவில்களில் உள்ள சிவன் வேறு என்று கூற இயலாது . வழிபடும் முறைகளில் உள்ள சிறு வேறுபாடுகளைக் கொண்டு தெய்வங்களையே வேறுபடுத்திக் கூறும் வாதம் பொருந்தாதது . வைதிகக் கடவுள்களும் பழந்திராவிடக் கடவுள்களும் இணைக்கப்பட்டதாக மேலைநாட்டு அறிஞர்கள் கூறியதில் உண்மை இருக்கக் கூடும் . குறிப்பாக, சிவனுக்கு இது உண்மையாக இருக்கலாம் . எனினும் அது வடநாட்டில் கி .மு. ஆயித்துக்கு முன் நடந்திருக்கக் கூடுமே தவிர சங்க காலத்தில் தமிழகத்தில் நடந்ததாகக் கருதுவது பொருந்தாதது.

**கார்த்திகேசு சிவத்தம்பி:**

அறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி தனது , 'பண்டைத் தமிழ்ச் சமூகம் - வரலாற்றுப் புரிதலை நோக்கி' என்ற நூலில் பின்வரும் கருத்து களைக் கூறுகிறார் . வைதிக மதங்களின் எழுச்சிக்கு முன் தமிழ்நாட்டில் சமண , பௌத்த மதங்களே முக்கியத்துவம் பெற்றிருந்தன என்று தமிழ்பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய ஐராவதம் மகாதேவன் அவர்களின் நூலைத் தொடர்புபடுத்தி அவர் கூறுகிறார் . அவர் குறிப்பிடும் காலம் சங்க காலம்தான் [21]. சங்க இலக்கியங்கள் ஆரியர் அல்லாத , ஆரியருக்கு முற்பட்ட பண்பாட்டைக் காட்டுவதாக அவர் கருதுகிறார் [22]. தொடக்ககாலத் தமிழ் இலக்கியத்தில் சமணம் மற்றும் பௌத்தம் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம் என்றும் எவ்வகையில் பார்த்தாலும் அவர்கள் இந்து ஆரியர்களுக்கு முன் இங் கு குடியேறிவிட்டனர் என்றும் அவர் கூறுகிறார் [23]. ஆனால் இலக்கியச் சான்றுகள் இக்கருத்துகளுக்கு முற்றிலும் முரணாக இருப்பதைப் பின்னர் காணலாம்.

**கே.கே.பிள்ளை:**

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட , 'சங்கத் தமிழர் வரலாறு - மக்களும் பண்பாடும்' என்ற சிறந்த நூலை எ ழுதிய அறிஞர் கே .கே. பிள்ளை அந்நூலில் சங்கத் தமிழர் சமயநிலை பற்றிக் கூறும்போது , 'கடவுளும் சமயமும் ' என்ற பகுதியில் [24] நடுகல் வழிபாட்டை முதன்மையாகக் கூறி, பேய், பூதம், மரத்தில் உறையும் தெய்வங்கள், பிறை தொழுதல் பற்றிக் கூறி , பின்பு தொல்காப்பியம் கூறும் திணைத் தெ ய்வங்கள் பற்றிக் கூறுகிறார் . 'இக்கடவுள்களைப் பற்றிய எண்ணற்ற புராணக் கதைகள் சிலப்பதிகாரக் காலத்துக்குள் தமிழகத்தில் நுழைந்துவிட்டன . தமிழகத்தில் குடியேறிய ஆரியர்கள் சமயக்கதைகள் பலவற்றைப் புனைந்து பரப்பிவிட்டனர் . அவர்கள் வேள்விகள் வளர்க்கத் தொடங்கினர் ' என்று கூறுகிறார். அதாவது சிலப்பதிகாரக் காலத்திற்கு சற்று முன்பாகத்தான் இவை தமிழகம் வந்தன என்பது போன்ற ஒரு தொனி அவர் கூற்றில் உள்ளது . ஆனால் அவரே ஆரியர் தமிழ்நாடு வந்தது கி .மு 6 - 4 ஆம் நூற்றாண்டில் எனக் கூறியுள்ளார் [25].


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

இறுதிப் பகுதியில் , 'சிவன் முழுமுதற் கடவுளா க் கருதப்பட்டான் ' என்று சிறுகுறிப்பாக எழுதி , சிறுதெய்வ வழிபாடுகள் பற்றியும் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் உள்ள தெய்வ வழிபாடுகளைப் பற்றிய சில குறிப்புகளை அவர் வேறு சில இடங்களில் குறிப்பிட்டிருந்தாலும் சங்க இலக்கியத்தில் மிகப்பலவாக உள்ள தெய்வ வழிபாடுகள் பற்றி, 'கடவுளும் சமயமும்' என்ற இப்பகுதியில் மிகமிகச் சிறிதளவே குறிப்பிட்டுள்ளார். சங்ககாலச் சமயம் பற்றி நாம் காணப்போகும் சித்திரத்துக்கும் அவர் காட்டும் சித்திரத்துக்கும் மிகப் பெரும் வேறுபாடு உள்ளது.

**சங்க இலக்கியம் காட்டும் தமிழர் சமயம்:**

சங்க இலக்கியம் அக்காலத் தமிழரின் சமயநிலையைக் காட்டும் தெளிவான கண்ணாடியாக உள்ளது. எனவே சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஆதாரங்களைக் கொண்டு அக்காலத் தமிழர் சமயம் பற்றி ஆராய்வோம் . சங்க இலக்கியங்களில் உள்ள கருத்துகளை நேரடியாக அறிந்து தொகுக்கும் முயற்சியில் அறிஞர் மு . சண்முகம் பிள்ளையின் , 'சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்' என்ற சிறந்த நூல் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**வேதத்தைப் போற்றல்:**

வடமொழியில் உள்ள வேதங்களே இந்து மதத்தின் அடிப்படை என்பதும் வேதங்களில் கூறப்பட்ட தெய்வீகக் கருத்துகளே காலப்போக்கில் விரிவும் , மாற்றமும், வளர்ச்சியும் பெற்று புராணங்கள், ஆகமங்கள் தோன்றி தற்கால இந்து மதமாக உள்ளது என்பதும் அறிஞர் கருத்து . சங்க காலத் தமிழர் வேதங்களை நன்கு அறிந்திருந்தனர் ; வேதத்தை மிகவும் உயர்வாக மதித்துப் போற்றினர். சங்க இ லக்கியத்தில் காணப்படும் பின்வரும் தொடர்களும் கருத்துகளும் இதைத் தெளிவுபடுத்தும். "நால் வேதம்" (புற. 2:18), "அந்தணர் அருமறை" (பரி. 1:13 மற். பல), "நான்மறை" (புற. 26:13 மற். பல), "நற்பனுவல் நால்வேதத்து " (புற. 15:17), "சிறந்த வேதம் விளங்கப் பாடி " (மது. 468), "முதுமொழி" (பரி. 3:42 மற். பல), "முதுநூல்" (புற: 166:4' அக. 181:15-16), "அந்தணாளர் நான்மறை" (புற. 362:8-9) என்ற தொடர்களைச் சங்க இலக்கியத்தில் காணலாம். 'வேதம் எழுதப்படாமல் காதால் கேட்டு கற்கப்படுவது' என்று குறுந்தொகை கூறுகிறது (குறு. 156:5). வேதம் என்பது ஆ று அங்கங்கள் எனப்படும் ஆறு அறிவுத் துறைகளை உடையது. இதை, 'வேதம் ஆறு அங்கத்தினால் உணரப்படுவது' என்று புறநானூறு கூறுகிறது (புற.166:4). 'குற்றமற்ற உயர்ந்த அந்தணர் ஆராயும் கெடுதல் இல்லாத வேதம்' (பரி. 2:24-25), 'நால் வேத நெறி என்றும் நிலைதிரியாதது ' (புற. 2:17-19), 'நீண்ட சடையுடைய முது முதல்வனான சிவனின் வாயில் நீங்காது உறைவது வேதம் ' (புற. 166:1-4) என்றெல்லாம் வேதம் போற்றிக் கூறப்பட்டது.

**தமிழகத்தில் பார்ப்பனர் நிலை:**

வேதங்களைக் கற்று வேத வேள்விகள் , பூசைகள் மற்றும் திருமணச் சடங்குகள் முதலிய வேதவழிச் சடங்குகள் ஆகியவற்றைச் செய்வோர் பிராமணர் ஆவார் . அவர்கள் வேதத்துடன் அதன் ஆறு அங்கங்களையும் கற்றவர்கள் : ஆறு தொழில்கள் அவர்க்கு உரியன என்பர் (பதி. 24:6-8).


http://Creativecommons.org//license/by/4.0/.

பார்ப்பனர், வேதியர், அந்தணர் என்றெல்லாம் கூறப்பட்ட பிராமணர் சங்க காலத்தில் மிகவும் உயர்வாக மதித்துப் போற்றப்பட்டனர் . பின்வரும் சங்க இலக்கியத் தொடர்களும் கருத்துகளும் இதைத் தெளிவாக்கும். அவர்கள், “நான்மறை முதல்வர்” (புற. 26:13), “மறைகாப்பாளர்” (பெரும். 301), “அறுதொழில் அந்தணர்” (புற. 397:20), “ஆறறி அந்தணர் (கலி. 1:1), “அறம்புரி அந்தணர்” (பதி. 24:6-8), “வேதியர்” (பரி. 11:84-85) “அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர் ” (புற. 93:7), ' ஈர நெஞ்சினர் ' (பரி.14:27-28), ‘பசுக்களைப் போன்றவர்கள் ’ (புற. 9:1), ‘மிகுந்த நூல் கேள்வியறிவும் , ஐம்புலன்கள் அடங்கிய விரதங்களும் உடையவர்களான நான்மறை முதல்வர் ’ (புற. 26:12-13) என்றெல்லாம் அவர்கள் புகழப்பட்டனர். ‘வேள்வியில் நெய்யை ஆவுதி செய்து கடவுளரை வழிபடும் அந்தணர் பிற உயிர்க்கு துன்பம் நினையாத கொள்கையினர் ; சூரியன் போல வாய்மை உடையவர் ’ என்கிறது பதிற்றுப்பத்து (21: 1-7). இவர்கள் இருபிறப்பாளர்கள் (திருமு - 182, புற. 367:12, பரி. 14:27-28) (உபநயன சடங்கு செய்யப்பட்டபின் இவர்கள் இரண்டாவது பிறப்பை அடைவதாகக் கருதுவர் ). இவர்கள் தீ ஓம்புபவர்கள் (புற. 122:3); மூன்று வகையான முத்தீ வேள்விகளை ஓம்புவர் (புற. 2:22-23, 367:12-13, திருமு. 181) ( காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்ற மூன்று ஹோமங்களை மூன்று வேளையிலும் செய்தல் அந்தணர் கடமை . இதை முத்தீ என்பர் ). இமயப்பகுதியில் உள்ள அந்தணர் இவ்வாறு முத்தீ வளர்த்தலை புறநானூறு கூறுகிறது (புற. 2:22-23). இவர்கள் மார்பில் பூணூல் அணிவர் (பரி. 11:79, திருமு. 183). பிராமண மாணாக்கர் புரச மரத்தின் தண்டும் கமண்டலமும் கைகளில் கொண்டு விரத உணவை உண்பர் (குறு. 156:1-4) ( இது மனுதர்ம நூல் போன்றவற்றில் கூறப்பட்ட முறையாகும்). வேதம் கற்கும் பிராமணச் சிறுவர்கள் குடுமித்தலையராக இருந்தனர் (ஐங். 202:1-4). பார்ப்பனரில் உயர்ந்த கல்வி கற்பவர்கள் 48 வயது வரை பிரமசரிய விரதம் மேற்கொண்டு கல்வி கற்றனர் (திருமு. 178-179 மற். பிற) (அதன் பின்பே திருமணம் செய்துகொண்டனர் ). காடுகளில் பிராமண முனிவர்கள் தீ வேள்வி இயற்றி வந்தனர் (பெரும். 494-500). முக்கோல் பகவர் என்னும் பிராமணத் துறவிகள் பற்றிய குறிப்பைக் கலித்தொகை கூறுகிறது (கலி. 9:1-4). தும்பிகள் பூந்தாது உண்டு பாடுவது போல விடியற் காலையில் அந்தணர் வேதத்தைப் பாடினர் (மது. 654-656). பார்ப்பனர் வேதம் ஓதுதலைக் கேட்டு அவர்கள் வீட்டுக் கிளிகளும் வேதம் ஓதின (பெரும். 300-301). பேரூர் மக்கள் (இது மதுரையாக இருக்க வேண்டும் ) அந்தணர் வேதம் ஓதுதலைக் கேட்டுத் துயிெழுழுதல் அல்லாமல் வஞ்சி , உறையூர் மக்கள் போல , கோழி கூவித் துயிலெழுதல் இல்லை என்கிறது ஒரு பரிபாடல் (பரி. திர. 7:7-11). வழிச்செல்லும் பாணர்களுக்கு பார்ப்பனர் வீடுகளில் அருந்ததி போல் கற்புடைய பார்ப்பன மகளிர், உயர்தர அரிசியால் செய்யப்பட்ட சோற்று வகைகளை, வெண்ணெயில் வேகவைக்கப்பட்டு, மிளகுப்பொடியும் கறிவேப்பிலையும் கலந்து செய்த மாதுளைப் பொறிகறியுடனும், மாவடு ஊறுகாயுடனும் உணவிடுவர் . ( பெரும். 297-310). சங்க அகப்பாடல்களில் தலைவனது தோழர்களில் பார்ப்பனத் தோழனும் உண்டு . சங்கப் புலவர்களில் பலர் பிராமணர்கள் . தலைசிறந்த சங்கப்புலவரான கபிலர் ஒரு பிராமணர் . ‘பார்ப்பாரைத் தவிர வேறு யாரையும் பணிந்து அறியாதவன் நீ' எனச் சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனை பதிற்றுப்பத்து புகழ்கிறது (பதி. 63:1).


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

காரிகிழார் என்னும் புலவர் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடும் போது , 'சிவபெருமான் கோவிலை வலம் வரும் போது உன் வெண்கொற்றக்குடை தாழ்க; நான்மறை முதல்வரான அந்தணர் உன்னை வாழ்த்தும் போது உன் தலை வணங்குக ' என்று கூறுகிறார் (புற. 6:17-20). புறத்திணைத் துறைகளில் அரச வாகைத் துறையில் அரசனின் வெற்றி புகழ்ந்து பாடப்பட்டது போல , பார்ப்பனவாகை என்ற துறையில் சிறந்த பார்ப்பனர்கள் போற்றிப் பாடப்பட்டனர் . பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் விண்ணந்தாயனின் கல்விச்சிறப்பையும் அவன் செய்த வேள்விச் சிறப்பையும் ஆவூர் மூலங்கிழார் புகழ்ந்து பாடினார் (புற. 166). மெலிந்த ஒரு எளிய பார்ப்பனன் தூதாக வந்து ஒரு சில சொற்களைக் கூறி பெரும் போரை நிறுத்தியதை ஒரு பார்ப்பனவாகைப் பாடல் கூறுகிறது (புற. 305). சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனார் என்ற பார்ப்பனப் புலவரும் வட்டாடிய போது மாவளத்தான் புலவர் மீது வட்டை எறிந்தான் . 'உன் முன்னோர் எவரும் பார்ப்பார் நோகும்படியான செயலைச் செய்ததில்லை . இது உனக்குத் தகுமோ ' என்று புலவர் பாடினார் (புற. 43:13-15). 'போர் தொடங்கும்போது, பசுக்களும், பசுக்களைப் போன்ற பார்ப்பன மக்களும் , பெண்களும், பிணியுடையோரும், முன்னோர்க்கடன் செலுத்துவதற்குப் பிள்ளை பெறாதவரும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவித்து , போர் தொடங்கும் அறம் உடையவன் ' என்று பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் புகழ்கிறார் (புற. 9). ஐங்குறுநூற்றில் ஒரு பாடல் , தலைவியைத் தலைவன் புறத்தொழுக்கம் காரணமாக பிரிந்திருந்த காலத்தில் தோழியும் தலைவியும் வேண்டிக்கொண்டதைக் கூறுகிறது. தலைவனுக்கு பிற பெண்களின் தொடர்பு ஏற்படக் கூடாது என்று தோழி வேண்டிக் கொள்கிறாள் . தலைவியோ, 'நாட்டின் பகைவர்கள் புல் சோறு உண்க ; பார்ப்பார் வேதத்தை ஓதுக' என்று நாட்டு நலனுக்காக வேண் டுகிறாள் (ஐங். 4). இதனால் பார்ப்பார் வேதத்தை ஓதுவதும் வேள்வி செய்வதும் நாட்டுக்குப் பெரிதும் நன்மை செய்வதாகக் கருதப்பட்டமை விளங்கும் . கபிலர் முதலிய பிராமணப் புலவர்களின் பாடல்களுக்கும் மற்றவர்களின் பாடல்களுக்கும் வேறுபாடு காணமுடியவில்லை. வடமொழியை அவர்கள் திணித்ததாக சங்க நூல்களில் காணமுடியவில்லை.

**வேள்விகள் நடத்துதல்**:

வேதத்தால் விதிக்கப்பட்ட வேள்விகளை அந்தணர் மரபு வழுவாமல் செய்தனர் (திருமு. 95-96). தாங்கள் நாள்தோறும் செய்யும் முத்தீ வேள்வி தவிர அரசர்கள் , பொதுமக்களுக்காகவும் அவர்கள் பல்வேறு வேள்விகளைச் செய்து வந்தார்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் , சிற்றரசர்களும், மக்களும் செய்த வேள்விகளைப் பற்றி மிகப்பல குறிப்புகள் உள்ளன . வேள்வி நடைபெறும் முறை பற்றிய குறிப்புகளைப் புறநானூறு (15:17-21, 166, 224:5-9), பெரும்பாணாற்றுப்படை (315-319), பதிற்றுப்பத்து (21:1-7) முதலியவற்றில் காணலாம். திருப்பரங்குன்றத்தில் அந்தணர் செய்யும் வேள்விகளின் புகையும் அகில் புகையும் வானத்தில் எழுந்து சூரிய ஒளியும் மங்கும்; இமைக்காத தேவர்களும் இமைப்பர் என பரிபாடல் வர்ணிக்கிறது (பரி. 17:28-32). வேள்விகள் செய்த மன்னர்களாக பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (புற. 15:17-21, மது. 759-763), தலையாலங்காலத்து செருவென்ற நெடுஞ்செழியன் (புற. 26:12-15), சோழன் கரிகாலன் (புற. 224:6-9), சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி (புற. 377:5-6), சோழன்


http://Creativecommons.org//license/by/4.0/.

குறமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (புற. 397:20-21), சேரன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் (பதி. 21:1-7), சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன் (பதி. 70:17-23), சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை (பதி. 74), அதியமான் நெடுமானஞ்சியின் முன்னோர் (புற. 99:1), மலையமான் திருமுடிக்காரி (புற. 122:2-3) ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். மன்னர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் வேள்விகள் செய்தனர் (பட். 200-204). பாண்டியன் முதுகுடுமிப்பெருவழுதி வேள்விக்குடி என்ற ஊரை பிராமணர்களுக்குத் தானமாக அளித்திருந்தான்[1]. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்து பாடிய குமட்டூர்க் கண்ணனார் என்ற பார்ப்பனப் புலவருக்கு சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 500 ஊர்களை பிரமதாயமாகத் (பிராமணர்க்குத் தரப்படும் இறையிலி நிலம்) தந்தான் என்று அப்பாட்டின் பதிகம் கூறுகிறது. மலையமான் திருமுடிக்காரி அவன் நாட்டையே பார்ப்பனர்க்குத் தானமாகக் கொடுத்தான் என்று சொல்லும்படி மிகுந்த நிலத்தைத் தானமாகக் கொடுத்திருந்தான் (புற. 122:2-3).

இவற்றால் சங்க காலத் தமிழர் சமுதாயத்தில் பார்ப்பனர் ஒரு அங்கமாக இருந்ததையும் அவர்கள் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்டதையும் அறியலாம். வேதங்களைக் கற்று வேதியருக்கு உரிய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தோர் மட்டுமே இவ்வாறு பெரிதும் மதிக்கப்பட்டனர். அப்படி அல்லாமல் பிராமணராய்ப் பிறந்துவிட்டதால் மட்டுமே அவர்கள் மதிப்பும் செல்வமும் பெற்றுவிடவில்லை. வேள்வி செய்யாத பார்ப்பனர் சிலர் சங்கறுக்கும் தொழில் செய்தனர் (அக. 24:1-3). உயர்குணம் அற்ற ஒரு முதிய பார்ப்பான் கேலிக்குரியவனாக ஒரு பாட்டில் கூறப்படுகிறான் (கலி. 65). வறுமையில் உள்ள பார்ப்பனர்களும் உண்டு (அக. 337:5-12).

**தெய்வங்களின் வழிபாடுகள்:**

இக்கால இந்துமத தெய்வங்கள் பெரும்பாலும் அனைத்தும் சங்க காலத்தில் வழிபடப்பட்டன என்பதை சங்க இலக்கியங்களின் மூலம் அறியலாம்.

**சிவன்:**

சங்க நூல்கள் சிவனைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றன. அவன், “முதுமுதல்வன்” (புற. 166:1-2); 'தெய்வங்களுக்குத் தலைவன்' (மது. 453-458); "அந்தணர்க்கு வேதத்தை அருளியவன்' (கலி. 1:1-4); 'அவன் நாவில் வேதம் எப்போதும் தங்கும்' (புற. 166:1-2); 'வேதம் ஓதும் அந்தணர் அவனது நீலகண்டத்தைப் போற்றிப் பாடுவர்' (புற. 1:5-6); “நான்மறை முதுநூல் முக்கட்செல்வன்” (அக. 181:15-16). இக்கருத்துகளையே பிற்காலத் தேவாரப்பாடல்கள், 'சிவனே பரம்பொருள்; சிவன் வேதத்தைத் தந்தவன்; வேதம் ஓதும் நாவினை உடையவன்; வேதத்தால் போற்றப்படுபவன்; வேதத்தின் உட்பொருளானவன்' என்று பல பாடல்களில் கூறுகின்றன. சிவன் 'நெற்றிக்கண் உடைய முக்கண்ணன்' (அக. 181:16, கலி.104:11-12 மற். பல); 'சிவந்த நிறம் உடையவன்' (அக. 360:6-9, அக. கட.வா. 8); 'சடைமுடி உடையவன்' (புற. 56.1, 166:1-2, கலி. 104:11-12); 'சடையில் பிறைமதியைச் சூடியவன்' (புற. 55:4-5, கலி. 104:11-12 மற். பல); 'கங்கையையும் சூடியவன்' (கலி. 1:1-4, கலி.150:9); 'கொன்றை மாலை சூடியவன்' (கலி.142:27-28, 150:1-2); (நஞ்சு உண்டதனால்) 'நீல மணி போன்ற நிறமுடைய கண்டத்தை உடையவன்' (புற. 55:4, 56:2, கலி.1:4 மற். பல); 'உமையை ஒரு பாகத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

கொண்டவன்' (புற. 1:7-8, ஐங். கட.வா,); 'உமையுடன் இமைய மலையில் அமர்ந்திருப்பவன்' (கலி. 38:1-2, திருமு. 153-154); 'திருவாதிரையான்' (கலி. 150:20-21); 'புலித் தோல் ஆடை அணிந்தவன் '; 'சூலம் தாங்கியவன்' (அக. கட.வா, மற் பல.); அவன் 'ஆலமர் கடவுளான தட்சணாமூர்த்தி' (புற.198:9, சிறுபா. 97 கலி. 81:9, 83:14-15); 'காளை ஊர்தி உடையவன் ' (கலி. 150:13, பரி. 8:2); 'காளைக் கொடியும் உடையவன்' (புற. 56:1, திருமு. 151-152); 'காலனை அழித்த காலகாலன் ' (கலி. 101:24-26, 103:43-45). 'பைங்கண் பார்ப்பான் ' (பரி. 5: 27). இவ்வாறாக சங்க நூல்கள் சிவனை விவரிக்கின்றன . சிவனை முதுமுதல்வன் என்றும் நான்மறைச்செல்வன் என்று கூறுவது சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் சைவ மரபின் தொடக்ககால நிலையைக் காட்டுகிறது.

**திருமால்:**

இவன், 'பாற்கடலில் பள்ளி கொண்ட ஆழி முதல்வன் ' (கலி. 105:71-72, பரி. 2:19); 'பாம்பணை மேல் பள்ளி கொண்டவன்' (பெரும். 372-373, பரி. 13:26-29, கலி. 105:71-72, 123:4-5); 'திருமகளின் கணவன்' (பரி. 3:90). இவன் மார்பில் திருமகள் இருப்பாள் (பெரும். 29-30, பதிற். 31:7, முல். 1-2 மற். பல). இவன், 'நீலநிற வண்ணன்' (புற. 56:5, பெரும். 30, 402, மற். பல); 'தாமரைக் கண்ணன்' (பரி. 15:49). திருமாலின் கைகளில் சங்கும் சக்கரமும் இருக்கும் ((முல். 1-2, அக. 175:14, கலி. 134:1-4, மற். பல). அவனது கொடி கருடக்கொடி (புற. 56:6, பரி. 2:60, 3:15-18,). மன்மதன் இவனது மகன் (கலி. 140:7). அவன் கொப்பூழில் தோன்றிய தாமரை மலரில் இருந்து நான்முகன் தோன்றினான் (பெரும். 402-404). திருமால் மார்பில் சிறந்த மணி (கௌஸ்தூபம்) இருக்கும் (பரி. 1:8-9). இவன் துளசிமாலை அணிந்தவன் (பதி. 31:7-9, பரி.13:59-60). இவ்வாறு திருமாலைப் பற்றி சங்க நூல்கள் கூறுகின்றன . நற்றிணையின் கடவுள் வாழ்த்துப்பாடல், 'திருமாலே வேதத்தில் போற்றப்படும் பரம்பொருள் என்பார்கள் ' என்று கூறுகிறது. பல பரிபாடல்கள் திருமாலைப் பரம்பொ ருளாகக் கொண்டு போற்றுகின்றன (பரி. 2:57, 3:4-14, 3:48-58 மற். பல). இது திருமாலைப் பரம்பொருளாகக் கொள்ளும் வைணவத்தின் தொடக்ககால நிலையைக் காட்டுகிறது.

**நான்முகன்:**

உலகங்கள் எல்லாம் தோன்றிய போது முதலில் தோன்றியவன் நான்முகன் (கலி. 2:1-2). அவன் திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றினான் (பெரும். 402-404). இவன் நாவில் வேதம் பிறந்தது (பரி. திர. 8:7-11). இவன் 'ஆதி அந்தணன் ' (பரி. 5:22). 'படைத்தவன்' என்ற சொல்லால் இவனைக் குறிப்பிடும் குறிப்புகள் உண்டு. (கலி. 106:18-19, புறம். 194:5, நற். 240:1).

**உமை:**

உமை சிவனின் ஒரு பாகம் ஆனவள் (ஐங். கட.வா); இமய மலையில் சிவனுடன் அமர்ந்திருப்பாள் (கலி. 38:1-2, திருமு. 153-154); 'மலைமகள்' (திருமு. 257).

**திருமகள்:**


http://Creativecommons.org//license/by/4.0/.

செல்வத்தின் கடவுள் திருமகள் (அக. 316:13-16 திருமு. 70, பட். 291, மற். பல). இவள் சிவந்த நிறம் உடையவள் (அக. 316:14, பரி. 2:31); தாமரை மலரில் அமர்ந்து யானைகள் நீறூற்ற இருப்பாள் (கஜலட்சுமி) (கலி. 44:5-7).

**இந்திரன்:**

வானில் உள்ள தேவர்கள் உலகத்தின் தலைவன் இந்திரன் (பரி. 5:51-52, 58-60, 69). அவன் ஆயிரம் கண்ணுடையவன் (திருமு.155-156); வச்சிராயுதம் கொண்டவன் (புற. 241:3, பரி.5:51-52, கலி.105:15). இந்திரனும் தேவர்களும் அமுதை உட்கொள்பவர் (புறம். 182:1-2).

**தேவர்கள்:**

தேவர்களைப் பற்றி, பல பாடல்களில் குறிப்புகள் உள்ளன. 'வானோர்' (புற. 213:22-23, பதி. 21:14-15), "அமரர்" (புற. 99:1), "புத்தேள்" (புற. 22:35), "ஐயர்" (பதி. 70:19), 'அவி உணவினோர்' (புற. 377:5), 'நாற்ற உணவினோர்' (மது. 458), 'வாடாத பூவுடையவர் ; இமைக்காதவர்' (மது. 457) என்று இவ்வாறாக அவர்கள் கூறப்படுகின்றனர்.

**முருகன்:**

முருகன் சிவனது மகன் ; சிவன் உமை சேர்க்கையால் உண்டான சூலினை அக்கினி பெற்று பின் கார்த்திகைப் பெண்கள் பெற்று சரவணப்பொய்கையில் தோன்றி யவன்; தேவர்களின் சேனாபதியாகி அசுரர்களை அழித்தவன் (பரி. 5:21-54, 9:7-11 திருமு. 253-259, பெரும். 458-459, கலி. 81:9, 83:14); மால் மருகன் (பரி. 19:57); இந்திரன் மகளான தேவயானையை மணந்தவன் (பரி. 9:7-11, 58); பின் வள்ளியையும் மணந்தவன் (நற். 82:4, திருமு. 101-102, பரி. 9:67, மற். பிற); ஆறுமுகமும் பன்னிருகைகளும் உடையவன் (திருமு. 91-118, பரி. 5:11-12, மற். பல); கடம்ப மாலை , கடம்பங் கண்ணி சூடியவன் (புற. 23:3, நற். 34:8, மற். பிற); 'வல்வேலன்' (திருமு. 45-46, குறிஞ். 51-52, மற். பல); "கந்தன்" (புற. 380:12); "குமரன்" (பரி. 91:81-82). யானை இவனது ஊர்தி (குறுந். 1:2, புற. 56:8, பதி. 11:6 மற். பல); மயிலும் இவனது ஊர்தி (பரி. 18:26). மயிலும், சேவலும் இவனது கொடிகள் (புற. 56:7, திருமு. 38-39). இவன் பெண்களைத் தீண்டி வருத்தக் கூடியவன் (குறிஞ்.174-175, நற். 288:10, அக. 98: 9-10); இதற்காக முருகனுக்கு வெறியாட்டு எடுப்பர் (அக. 22:5-11, குறு. 362:1-7, ஐங். 241-210, மற். பல). இவன் மலையில் உறையும் கடவுள் (திருமு. 267, குறிஞ். 208-209); அசுரர்களை அழித்தவன்; மாமர உருவில் நின்ற சூரபத்மனை அழித்தவன் (புற. 23:3-4, பதி. 11:5-6, குறுந்.1:1-3 மற். பல); வேலை எறிந்து கிரவுஞ்ச மலையை அழித்தவன் (திருமு. 266-267, பரி. 8:29, மற். பல).

**காளி:**

இவள் கொற்றவை எனப்பட்டாள். இவள் காட்டில் கோயில் கொண்டவள் (கலி. 89:8, அக. 345:3-4, குறு. 218:1,); வெற்றி பெறும் சூலம் உடையவள் (குறு. 218:1); அச்சம் தரும் அவள் கோவிலில் பூதங்கள் காவல் காக்கும் (பட். 57-59). காட்டில் கோயில் கொண்டுள்ள கொற்றவைக்கு அவள் சுற்றமாகிய பேய்கள் விடுகதைகள் கூறுமாம்! (கலி. 89:8). அயிரை மலையில் கோவில் கொண்டிருந்த கொற்றவை பற்றி பதிற்றுப்பத்துப் பாடல்கள் குறிப்பிடுகின்றன (பதி. 79: 16-19, 88: 11-12, 90:19).


http://Creativecommons.org//license/by/4.0/.

**கண்ணன், பலராமன்:**

கண்ணனைத் திருமாலாகப் போற்றினர் (பரி. 2:20-21). வடநாட்டில் கண்ணன் வழிபாட்டுடன் பலராமன் வழிபாடும் சேர்ந்து பரவியது . பின் பலராம வழிபாடு குன்றிவிட்டது . அதுபோலவே தமிழகத்திலும் சங்க காலத்தில் சிவன் , திருமால், முருகனுடன், பலராமனும் ஒரு பெரிய கடவுளாக வணங்கப்பட்டான் (புற. 56:3-4, 58:14-16, கலி. 124:2, பரி. 1:3-5, மற். பல). பின்பு இங்கும் பலராம வழிபாடு மறைந்துவிட்டது. வைணவத்தின் பாஞ்சராத்ர ஆகமப் பிரிவு திருமாலின் நான்கு வியூக வடிவங்களாக கண்ணன் , பலராமன், பிரத்யும்னன், அனிருத்தன் ஆகியோரைக் கூ றும். இதை ஒரு பரிபாடல், 'செங்கண் காரி ! கருங்கண் வெள்ளை ! பொன் கண் பச்சை ! பைங்கண் மாஅல் !' என்று கூறுகிறது (பரி.3: 81-82). இப்பாடல் மிகப்பல ஆழ்ந்த சமயச் செய்திகளைக் கொண்டது . மிகுந்த வேத, புராண ஞானத்துடன் பாடப்பட்டுள்ளது. இதை இயற்றியவர் கடுவன் இள எயினனார். இவர் பெயரைக் கொண்டு இவர் வேடர் குலத்தைச் சார்ந்தவர் என அறியலாம்.

**கணபதி:**

சங்க இலக்கியத்தில் கணபதி காணப்படவில்லை என்று கூறப்படுவது வழக்கம் . ஆனால் மூன்றாம் பரிபாடலில் திருமால் ஒரு கை , இரு கை , முக்கை முதலிய எண்ணற்ற கைகள் உடையவனாகவும், வெவ்வேறு தெய்வங்களாய் இரு ப்பவனாகவும் வர்ணிக்கப்படுகிறான். அவ்வாறு கூறும்போது 'ஐங்கை மைந்த அறுகை நெடுவேல்' (பரி. 3:37) என்ற வரியில் 'ஐங்கை மைந்த!' என்பது சிவன் மைந்தனாகிய ஐங்கரன் என்ற கணபதியையே குறிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

**சிறு தெய்வங்கள்:**

மேலே கூறிய பெருந்தெய்வங்களுடன் ப ல சிறு தெய்வங்களும் வழிபடப்பட்டன . மரங்கள், குன்றுகள், நீர்த்துறைகள் போன்ற பற்பல இடங்களில் உறையும் தெய்வங்கள் வழிபடப்பட்டன (திருமு. 223-226, கலி. 101:13-14, மற். பல).

**புராணச் செய்திகள்:**

சங்க நூல்களில் பல புராணச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. உலகத் தொடக்க காலத்தில் நான்முகன் தோன்றுதல் (பெரும். 402-404, கலி. 2:1, பரி. 3:91-94), பிரளய காலத்தில் உருத்திரனால் எல்லா உலகங்களும் அழிக்கப்படுதல் (கலி. 129:1-2), திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியைக் கடல் அடியில் இருந்து கொண்டு வருதல் (பரி. 2:32-35, மற். பல), நரசிம்ம அவதாரமும் பிரகலாதன் கதையும் (பரி. 4:10-20), திருமால் வாமனனாக வந்து மூவடியால் உலகளந்தது ((முல். 3, பெரும். 29-30, கலி. 124:1-2), திருமால் தேவர்களுக்கு அமிழ்தத்தைக் கொடுத்தல் (பரி. 2:69-71, பரி.3:33-34), ஆதிசேடன் பாற்கடலில் அமுதம் கடையக் கயி றாக இருந்தது; சிவன் திரிபுரம் எரிக்க அவன் நாணாக இருந்தது ; அவன் பூமியைத் தாங்குவது (பரி.திர.1:64-78), கருடன் தன் தாய் வினதையின் துன்பம் போக்க அமிர்தத்தைக் கொண்டுவந்தது (பரி.3:15-18), சிவன் முப்புரங்களை எரித்தல் (புற. 55:1-4, பரி. 5:22-26, கலி. 2:1-8, மற். பல), முருகன் பிறந்த முறை (பரி. 5:21-54, திருமு. 253-255, பெரும். 458-459); அவன் தேவசேனாபதி ஆனது (பரி. 5:63-70 மற். திருமு. 260); அவன் மாமர சூரனைக் கொன்றது (புற. 23:3-4,


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

பதி.11:5-6, திருமு. 45-46, பரி. 5:1-7 மற். பல), மன்னர்களைக் கொன்ற பரசுராமர் செய்த வேள் வி (அக. 220:5-8), இந்திரன் அகலிகை கதை (பரி. 19:50-53), இராவணன் இமயமலையைப் பெயர்க்க முயன்றது (கலி. 38:1-5), இராமாயண நிகழ்ச்சிகள் (புற. 378:9-22, அகம். 70:13-16), கண்ணன் ஆயர்பாடி பெண்களின் துகில்களை எடுத்துக்கொண்டது (அக. 59:3-6); அவன் கேசியை மாய்த்தது (கலி. 103:53-55, பரி. 3:31-32), மகாபாரத நிகழ்வுகள் (பெரும். 415-420, கலி. 101:18-20, 104:57-59, மற். பல), அரக்கு மாளிகையை எரித்தல் (கலி. 25:1-8) முதலியவை பற்றிய குறிப்புகள் சங்க நூல்களில் உள்ளன.

இவற்றுள் பல உவமைகளாகவும் சுருக்கமான குறிப்புகளாகவும் கூறப்பட்டுள்ளன . மக்கள் நன்கு அறிந்த ஒன்றையே இவ்வாறு உவமை கூற முடியும். எடுத்துக்காட்டாக, கலித்தொகைப் பாடல் ஒன்று (கலி. 101), தன்னை அடக்க வந்த ஆயனைக் கொம்பால் குத்திக் குலைக்கும் காளையை வர்ணிக்கும் போது, 'அரும் கங்குல் வந்து தன் தாளின் கடந்து அட்டு தந்தையைக் கொன்றானைத் தோளின் திருகுவான் போன்ம்' என்று கூறுகிறது. அதாவது, நள்ளிரவில் சென்று, தன் தந்தையான துரோணரைக் கொன்ற திருஷ்டத்துய்மனை (வாளால் கொன்று அவனுக்கு வீர சுவர்க்கம் தர விரும்பாமல்) தன் வலிமையால் கழுத்தைத் திருகிக் கொன்ற அஸ்வத்தாமன் போல் அந்தக் காளை தோன்றியது என்பது இதன் பொருள். இக்கதை பொதுமக்களால் நன்கறியப்பட்டிருந்தால் அல்லாமல் இவ்வாறு உவமை கூற முடியாது.

**கோயில்கள்:**

நகரங்களிலும் சிற்றூர்களிலும் பற்பல தெய்வங்களுக்கும் பற்பல கோயில்கள் இருந்தன (மது. 455-460, பட். 283-291, அக. 99:8-10, குறிஞ். 5-7, முல். 8-10, நற். 358:6-7, பெரும். 233 மற். பல). ஆலமுற்றம் என்ற ஊரில் சிவன் கோயில் இருந்தது (அக. 181:14-22). நன்னனது நவிரமலையில் நஞ்சு உண்ட கடவுளான சிவனுக்கு கோயில் இருந்தது (மலை. 82-83). திருப்பரங்குன்றத்திலும் (அக. 59:10-12, 149:15-16, பரி. 8:95-112 மற். பல) திருச்செந்தூரிலும் (அக. 266:20-21, புற. 55:17-21) முருகன் கோயில் இருந்தது. பிற இடங்களிலும் முருகன் கோயில்கள் இருந்தன (புற. 299:6). அழகர்மலையில் திருமால் கோயில் இருந்தது (பரி. 15:17 மற். பல). இருந்தையூர், குளவாய் என்ற இடங்களில் ஆதிசேடனுக்குக் கோயில் இருந்தது. அங்கு திருமால் கோயிலுள் ஆதிசேடனுக்கும் தனிக்கோயில் இருந்ததாகத் தோன்றுகிறது (பரி. திர. 1:5, 50-59, 60-78). பாம்பணைப் பள்ளி அமர்ந்த திருமாலின் ஒரு கோயில் பற்றி பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது (பெரும். 372-373). இவ்வாறு கோயில்கள் இருந்ததை சங்க காலத்துக்குச் சற்றுப் பிற்பட்டதாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் தெளிவாக உறுதி செய்கிறது . ஊர் மன்றங்களில் மரத்தாலான கந்து என்பது வழிபடப்பட்டதைப் பற்றி பல குறிப்புகள் உள்ளன . இது மரத்தாலான சிவலிங்கமா என்பது ஆராய்ச்சிக்குரியது.

**நாள் வழிபாடும் திருவிழாக்களும் சடங்குகளும்:**

தெய்வங்களுக்கு நாள்தோறும் வழிபாடு நடந்தது (அக. 213:7, 287:6, 289:3, மது. 455-460 மற். பல). பூ, மணப்பொருள்கள் முதலியன கொண்டு வழிபாடு நடத்தப்பட்டது (குறிஞ். 1-5, நற். 322:11-12, பரி. 8:95-102, மற். பல). பெண்கள் நாள்தோறும் வீட்டில் உறையும் தெய்வங்களை நெல்லும் மலரும் தூவி,


http://Creativecommons.org//license/by/4.0/.

பலி (உணவு) தந்து வழிபட்டனர் (நெடு. 39-44, அக. 282:16-18, 369:7-8). ஏரகத்தில் அந்தணர் ஈர உடையோடு ஆறெழுத்து மந்திரத்தைக் கூறி (சரவணபவ) முருகனை வணங்கினர் (திருமு. 181-189). திருவிழாக்கள் நிறைய நடத்தப்பட்டன (குறு. 41:2, 223:1-2, அக. 17:19, புற. 65:4-5, 82:1, 84:4, நற். 293:4, பட். 215, பெரும். 411). சிவனுக்கு உரிய திருவாதிரைத் திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டது ; விரிந்த கல்வியுடைய அந்தணர் அதை முன்னின்று நடத்தினர் (பரி.11: 76-79). திருமாலுக்குரிய திருவோண விழாவும் சிறப்பாக நடந்தது (மது. 590-599), திருவேங்கடத்தில் பல விழாக்கள் நடைபெற்றன (அக. 61:13), திருப்பரங்குன்றத்தில் பல விழாக்கள் நடைபெற்றன (அக: 149:13-16 மற். பல). உறையூரில் பங்குனித் திருவிழா நடந்தது (அக. 137:6-11). சில ஊர்களில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன (பட். 158, அக. 115:1), இந்திர விழா (ஐங். 62:1), காமன் விழா (கலி.27:24) போன்றவையும் கொண்டாடப்பட்டன . கார்த்திகைத் தீபத் திருவிழா ஊரெங்கும் கொண்டாடப்பட்டது (அக. 141:5-11, 185:11-12, நற். 202:9-11). ஊர் மன்றங்களில் கள்பலி கொள்ளும் தெய்வங்களுக்கு குயவன் கள்பலி கொடுத்தான்; பின் அவன் அதைக் குடித்தான்; இந்த விழா பற்றிய செய்தியையும் அவன் ஊருக்கு அறிவித்தான் . ( நற். 200:1-4, 293:1-4). ஈமச்சடங்குகளைப் புலையன் செய்தான் (புற. 360:17-21, 363:10-18).

**பிற கருத்துகள்:**

நாள்மீன் எனப்படும் நட்சத்திரங்களும் கோள்களும் அறியப்பட்டிருந்தன (பட். 67-69, சிறு. 242-243 மற். பல). அருந்ததி கற்பரசியாகப் போற்றப்பட்டாள் ; அருந்ததி விண்மீன் போற்றப்பட்டது . ( பெரும். 302-303, ஐங். 442: 3-5, புற. 122:8-10, மற். பல). கண் துடித்தல் , பல்லி சொல்லுதல் முதலிய சகுனம் பார்த்தல், நல்ல நாள், நற்கிரக நிலை பார்த்தல் ஆகியன இ ருந்தன (புற. 204:10-11, நற். 246:1-7, ஐங். 218:1-5, கலி. 5:9, மற். பல). திருமணம் நல்ல நாளில் செய்தனர் ; திருமணம் செய்ய ரோகிணி நட்சத்திரம் சிறந்ததாகக் கருதப்பட்டது (அக. 136:3-5, 86:5-7). பேய் முதலியவற்றை மக்கள் நம்பினர் (மது. 631-634, அக. 233:7-12. பெரும். 459, மற். பல). வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபட்டனர் (அக. 67:8-11 மற். பல). காக்கைக்குப் பலியிட்டனர் ; காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இருந்தது (குறு. 210:6, நற். 343:4-5, ஐங். 391:1-6, மற். பல).

**சமண, பௌத்த சமயங்கள்:**

இந்து மதத்தைப் பற்றிய நேரடிக் குறிப்புகள் மிகப்பலவாக சங்க நூல்களில் உள்ளன . ஆனால் சமண, பௌத்த சமயங்கள் தொடர்பாகக் காணப்படும் குறிப்புகள் ஒரு சில மட்டுமே உள்ளன . போதனார், இளம்போதியார், உலோச்சனார் என்ற சில புலவர்களின் பெயர்களை , பௌத்த, சமணத் தொடர்புடையனவாகச் சிலர் கருதுவர் . போதனார், இளம்போதியார் என்பவற்றுக்கு முறையே பூதனார், இளம்பூதியார் என்ற பாடபேதங்களும் உள்ளன. இவற்றையே நற்றிணை உரையில் ஔவை துரைசாமிப்பிள்ளை ஏற்கிறார்[26]. மேலும் ஞானம் என்பதைக் குறிக்கும் போதம் என்ற சமஸ்கிருதச் சொல் பௌத்தத்துக்கு மட்டுமே உரியது அன்று; வைதிகத்துக்கும் உரியது. எ - கா: சிவஞானபோதம். உலோச்சனார் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் 35 உள்ளன. அவற்றில் புறநானூற்றில் உள்ள 3


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

பாடல்கள் தவிர மற்றவை அனைத்தும் நெய்தல் திணைப் பாடல்கள் . எனவே அவர் நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவர் எனக் கொள்ளல் பொருந்தும் . அவர் தமது பா டல்களில் மீன்பிடித்தல் , மீன் சுடுதல், கருவாடு காயவைத்தல் , கள்ளுண்டு களித்தல் , நெய்தல் நிலத்தின் புலால்நாற்றம் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். புறநானூற்றுப் பாடல் 258ல் ஆநிரை கவர்ந்த ஒரு மறவன் கள் குடித்து ஊன் உண்டு மீண்டும் ஆநிரை கவரப் போனவன் மீண் டும் ஆநிரையுடன் கள் குடிக்க வரக்கூடும் என அவனை மிகவும் சிறப்பித்துப் பாடியுள்ளார் . புற. 274ல் ஒரு போர் மறவன் யானையை வேல் எறிந்து கொன்றபின் குதிரையில் தன்னைக் கொல்லவந்த வீரனை கையால் பிடித்துத் தூக்கி வீழ்த்துவதைச் சிறப்பித்துப் பாடுகிறார் . புற. 377ல் ஒரு கிணைப் பொருநன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை, 'வேள்வி அவியை உண்ணும் தேவர்கள் புறம் காக்க வாழ்க ' என்று வாழ்த்துவதாகப் பாடுகிறார் . இவை அனைத்தும் சமணருக்கு - குறிப்பாக, தலைமயிரைக் கையால் பிடிங்கும் லோசம் என்னும் சடங்கை மேற்கொள்ளும் சமணத் துறவிகளுக்கு முற்றி லும் பொருந்தாதவை. எனவே இவர் சமணர் அல்லர் என்பதும் உலோச்சனார் என்ற பெயருக்கும் சமணத்துக்கும் தொடர்பில்லை என்பதும் திண்ணம் . 'தவப்பள்ளி' என்று பட்டினப்பாலை கூறுவதை (பட். 52-55) சமண, பௌத்தப் பள்ளி என்றும், 'கடவுள் பள்ளி' என்று மதுரைக் காஞ்சி கூறுவதை (மது. 461-467) பௌத்தப்பள்ளி என்றும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகிறார் [27]. 'பள்ளி' என்ற சொல்லால் அந்தணர் இருப்பிடத்தையும், 'அந்தணர் பள்ளி' என்று மதுரைக் காஞ்சி குறிப்பதால் (மது. 474) நச்சினார்க்கினியர் கருத்து ஆராய்ச்சிக்கு உரியது . சாவகர் வணங்குவதாக மதுரைக்காஞ்சி கூறுவதும் (மது. 475-488), அகநானூற்றில் சமண முனிவர் பற்றிய குறிப்பும் (அக. 123:1-2) மட்டுமே சமணத்தைப் பற்றிய நேரடியான குறிப்புகளாகும் . பௌத்தம் பற்றிய நேரடிக் குறிப்பைக் காணமுடியவில்லை. எனவே அக்காலத்தில்தான் சமண , பௌத்த மதங்கள் புதிதாக இங்கு வந்து மக்களிடம் சிறிது பரவத் தொடங்கியுள்ளன என்று தெரிகிறது . ஆனால் சிலப்பதிகாரம் , மணிமேகலையில் சமண , பௌத்தக் குறிப்புகள் மிகுதி. அக்காலத்துக்குள் அவை மிகவும் வளர்ச்சி பெற்றுவிட்டன. பல அறிஞர்கள் சங்ககாலச் சமய நிலையைப் பற்றிக் கூறும் போது வைதிக , சமண, பௌத்த சம யங்கள் தமிழகத்தில் பரவியிருந்தன என்று கூறி இச்சமயங்கள் தமிழகத்தில் சம அளவில் பரவியிருந்தது போலச் சித்திரிப்பர் . இது தவறான சித்திரிப்பு ஆகும் . ஆசீவக சமயத்தைச் சுட்டும் குறிப்போ , ஆசீவகம் என்ற சொல்லோ சங்க இலக்கியத்தில் இல்லை . சங்க காலத்தில் அறியப்படாத ஆசீவகம் சிலப்பதிகாரம், மணிமேகலையில் இடம் பெற்றுள்ளது.

**சங்க காலத்துக்கு முன்:**

'அமரர்ப் பேணி , ஆவுதி அருத்திய (வேள்விகள் செய்த ) பழைமையான மரபுடைய உன் முன்னோர் போல ' என்று அதியமான் நெடுமானஞ்சியைப் பரணர் பாடுகிறார் (புற. 99:1-4). முன்பு குறிப்பிட்டபடி மாவளத்தானிடம் புலவர் தாமப்பல் கண்ணனார் , 'உன் முன்னோர் எவரும் பார்ப்பார் நோகும்படியான செயலைச் செய்ததில்லை . இது உனக்குத் தகுமோ ' என்று பாடினார் (புற. 43:13-15).


http://Creativecommons.org//license/by/4.0/.

இவை சங்க காலத்துக்கு நீண்ட காலம் முன்பே பிராமணர் தமிழகத்தில் வாழ்ந்ததையும் , அவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டதையும், வேள்விகள் செய்யப்பட்டதையும் உணர்த்தும்.

**தொல்காப்பியத்தில் வைதிகம்:**

சங்க காலத்துக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது பெரும்பாலான அறிஞர்களின் உறுதியான முடிவு . தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வைதிகம் தமிழ்நாட்டில் நன்கு நிலைபெற்றிருந்தது என் பதற்குப் பல சான்றுகள் தொல்காப்பியத்தில் உள்ளன . அவற்றைச் சுருக்கமாகக் கீழே காணலாம்.

தொல்காப்பியப் பாயிரத்தில் தொல்காப்பியன் என்பது அவரது இயற்பெயர் என்று கூறப்பட்டுள்ளது. இது பழமையான காப்பியக்குடி என்ற பிராமண கோத்திரத்தைக் குறிக்கும் என்பது அறிஞர்கள் கருத்து. இந்த 'காப்பியக்குடி' எனப்படும் 'காவ்ய கோத்திரம்' என்பது 'கவி' எனப்படும் சுக்ர முனிவரின் வம்சத்தை குறிக்கும் . 'காப்பியத் தொல்குடி கவின்பெற விளங்கி …' என்று சிலப்பதிகாரத்தில் பிராமணப் பெண்ணுக்கு மகவாகத் தோன்றிய பாசாண்ட சாத்தன் பற்றிக் கூறப்படுவது ஒப்புநோக்கத்தக்கது (சிலப். 30: 82-83). வெள்ளூர்க் காப்பியன், காப்பியாற்றுக் காப்பியன் என்ற பெயர்களும் இத்தகையவை . கௌதமன், காஸ்யபன், பாரத்வாஜன் முதலிய கோத்திரப் பெயர்களால் பிராமணர்கள் குறிப்பிடப்படுதல் பொதுவான வழக்கம் . பாவாணர் போன்றோரும் தொல்காப்பியரை பிராமணர் என் றே கொள்கின்றனர்[28]. நான்கு வேதங்களிலும் தேர்ச்சி பெற்ற பிராமணரான அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாகப் பாயிரம் கூறுகிறது.

வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுத தொல்காப்பியர் விதி வகுத்துள்ளார் (தொல். 2.9:5-6). எழுத்துகளைப் பற்றி அவர் கூ றும்போது, அகத்தெழு வளி இசையை அளபின் கோடல் அந்தணரின் வேதத்தில் உள்ளது என்றும் தான் அதைக் கூறாது வெளிப்பட்டு இசைக்கும் ஒலியைப் பற்றி மட்டும் கூறுவதாகவும் குறிப்பிடுகிறார் (தொல். 1.3:20-21).

தொல்காப்பியர் கூறும் தமிழ்ப் பொருளிலக்கணம் நால்வருண முறைக்கு இடம் தந்து அமைந்துள்ளது. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்று நால்வருண முறை கூறப்பட்டுள்ளது . முதல் மூன்று பிரிவினர் உயர்ந்தோராகவும் நான்காம் பிரிவினர் தாழ்ந்தோராகவும் கூறப்பட்டுள்ளனர் (தொல். 3.9:71-85). பின்வருபவை இதை மேலும் தெளிவாக்கும்.

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல். 3.1:28)

"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" (தொல். 3.1:31)

"உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான" (தொல். 3.1:33)

"உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான" (தொல். 3.1:36).

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" (தொல். 3.4:3)


http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கு சூத்திரர் என்ற பெரிதும் சர்ச்சைக்குரிய ஒரு பெயர் பற்றிச் சிறிது கருத வேண்டியுள்ளது. வேளாளர் என்பது சூத்திரரைக் குறிக்கும் தமிழ்ப் பெயராகும் . மனுஸ்மிரிதி போன்ற தர்மசாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ள சூத்திரர்க்குரிய இழிநிலை , சிறிதுகாலத்திற்குள் சூழ்நிலை மாற்றங்களால் இந்தியாவில் முற்றிலும் மாறிவிட்டது என அறியலாம் . வால்மீகி இராமாயணம் , பராசர ஸ்மிருதி , விஷ்ணு புராணம் , மகாபாரதம், அர்த்த சாஸ்திரம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள சில கருத்துகள் இதைத் தெளிவுபடுத்தும் . வால்மீகி இராமாயணத்தில் தசரதர் செய்த வேள்வியில் எல்லா வர்ணத்தாரையும் மதிப்புடன் எந்த அவமதிப்பும் நிகழாமல் நடத்த வேண்டும் என்றும் பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர் ஆகியோரை மிகுந்த மரியாதையோடு அழைத்து வருமாறும் தசரதர் கட்டளைப்படி வசிட்டர் கூறுகிறார்[29]. வியாசரின் தந்தையான பரா சரரின் ஸ்மிரிதி காலந்தோறும் சமூகநீதி மாறக்கூடியது என்றும் மனுநூல் முற்காலத்துக்கு உரியது என்றும் கூறுகிறது[30]. கலி யுகத்தில் சூத்திரன் சாது (சிறந்தவன்) என்று வியாசர் கூறியதாக விஷ்ணு புராணம் கூறுகிறது[31]. அமைச்சர்களை நியமிக்கும்போது 4 பிராமணர்களையும், 18 சத்திரியர்களையும், 21 வைசியர்களையும் 3 சூத்திரர்களையும் நியமிக்க வேண்டும் என்று பீஷ்மர் சொல்லியதாக மகாபாரதம் கூறுகிறது[32]. சூத்திரருக்கு உரிய பணி தொண்டு செய்வது மட்டுமே எனக் கூறும் மனுநூலின் நிலைக்கு மாறாக , வேளாண்மை, கால்நடை வளர்ப்பு , வாணிகம், கைத்தொழில்கள் ஆகிய வைசியருக்கு உரியவற்றையும் சூத்திரருக்கு உரியனவாக அர்த்தசாஸ்திரம் கூறுகிறது . மேலும் ஊர்களை உருவாக்கும்போது 100 முதல் 500 வரை சூத்திர வேளாளக் குடும்பங்களைக் குடியமர்த்துமாறு கூறுகிறது[33]. தொல்காப்பியத்தின் நால்வருணம் பற்றி ஒப்பிட வேண்டும் என்றால் சமகாலத்து வட இந்தியாவுடனோ சமகாலத்து வடமொழி நூல்களுடனோ ஒப்பிட வேண்டும் . மிக முற்பட்ட காலத்தைச் சேர்ந்த , மிக மாறுபட்ட சமுதாயத்துக்கு உரிய மனுநூலோடு பலரும் ஒப்பிடுவது தவறான ஒப்பீடு ஆகும் . தொல்காப்பியர் காலத்தைய வட இந்தியாவிலோ வடமொழி நூல்களிலோ சூத்திரர்களுக்கு மனுஸ் மிருதி குறிப்பிடுவது போன்ற இழிவு இல்லை . தொழில் அடிப்படையிலான உயர்வு , தாழ்வு மட்டுமே இருந்தது . தமிழ்நாட்டில் வேளாளர்களுக்கு பழங்காலம் முதல் தற்காலம் வரை எந்த இழிவும் இல்லை . அவர்கள் மதிப்புக்குரிய ஒரு சமூகமாகவே உள்ளனர். 'நீடு சூத்திர நற்குலம் ...', 'நீடிய சூத் திரத் தொல்குல நன்மை சான்ற ' என்று பெரியபுராணம் வேளாளர் எனப்படும் சூத்திரரை உயர்வாகவே கூறுகிறது[34]. எனவே தொல்காப்பியம் குறிப்பிடும் நால்வருண முறை அக்காலத்தில் இயல்பாக பாரதம் முழுவதும் இருந்த தொழில் வேறுபாட்டு முறையைக் கூறுகிறதே தவிர அதில் எதிர்க்கத்தக்கது எதுவும் இல்லை என்பது உணரத்தகும்.

தொல்காப்பியம் கூறும் தமிழ்ப் பொருளிலக்கணம் பார்ப்பனர் பற்றியவற்றையும் அங்கமாகக் கொண்டது. பின்வருபவை இதைத் தெளிவாக்கும்.

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல். 3.2:16)

"கபிலை கண்ணிய வேள்வி நிலையும்" (தொல். 3.2:29)

"அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்..." (தொல். 3.4:5)



http://Creativecommons.org//license/by/4.0/.

"அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய" (தொல். 3.4:36)
"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
.........................................................
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (தொல். 3. 4:52)
"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
.........................................................
களவின் கிளவிக்கு உரியர் என்ப" (தொல். 3. 8:181)
"பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரோடு தொகைஇ
தொல்நெறி மரபின் கற்பிற்கு உரியர்" (தொல். 3. 8:182)
"பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே" (தொல். 3. 8:189)

இவ்வாறாக, பார்ப்பனர் தமிழ்ப் பொருளிலக்கணத்தில் நீக்க முடியாத ஒரு இடம் பெற்றுள்ளனர். அரச வாகை போல பார்ப்பன வாகை என்ற புறத்திணைத் துறையும் உள்ளது . மேலே உள்ள வரிகளில் உள்ள 'என்ப' (என்பார்கள்), 'தொல்நெறி மரபின்' ஆகியவை பார்ப்பனர் தமிழ்ப் பொருளிலக்கணத்தில் இடம் பெற்றிருத்தல் தொல்காப்பியருக்கு முன்பே நிலைபெற்றிருந்த தமிழ் இலக்கண மரபு என்பதையும் இது தொல்காப்பியரால் புகுத்தப்பட்டது அல்ல என்பதையும் தெளிவாக்கும். 'பேணுதகு சிறப்பின் பார்ப்பான்' என்று தொல்காப்பியர் கூறுவதால் சங்க காலம் போலவே அவர் காலத்திலும் பார்ப்பனர் பெரிதும் மதிக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

மேலே கண்டவை, தமிழர்கள் நீண்ட காலத்துக்கே முன்பே வேதத்தையும் வைதிகத்தையும் ஏற்றுப் போற்றினர் என்பதையும் தொல்காப்பியர் காலத்துக்கு நீண்ட காலம் முன்பே பிராமணர் தமிழ்ச் சமுதாயத்தில் ஒன்றிக் கலந்து தமிழராக வாழ்ந்தனர் என்பதையும் பொருளிலக்கணத்தில் இடம் பெறும் அளவுக்கு ஒரு அங்கமாக இருந்தனர் என்பதையும் அவர்கள் மிகவும் மதிக்கப்பட்டனரே தவிர அயலாராகவும், பகைவராகவும், வந்தேறிகளாகவும் கருதப்படவில்லை என்பதையும் காட்டுகின்றன. தற்காலத்தில் கூறப்படுவது போல அவர்களைப் பற்றிய தவறான கருத்து எதுவும் காணப்படவில்லை.

**தமிழ்நாட்டில் வைதிகத்தின் நுழைவு:**

தமிழ்நாட்டில் வைதிகம் எப்போது வந்தது என்பது பற்றிப் பற்பல அறிஞர்கள் பற்பல மாறுபட்ட கருத்துகளைக் கூறியுள்ளனர். ஆரியர் வருகை என்று இதனைக் குறிப்பிடுவது வழக்கம். இது தவறான பொருள் தரும் ஒரு சொற்பயன்பாடு (misnomer) ஆகும். 'ஆரியர்' என்ற சொல் 'உயர்ந்தோர்', 'சமஸ்கிருதத்தினர்', 'வட இந்தியர்' ஆகிய வெவ்வேறு பொருள்களைக் கொண்டது. மேலைநாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கண்டுபிடிப்பின் பின் இச்சொல்லுக்கு, 'ஒரு மத்திய ஆசிய பழைய இனத்தவர்' என்ற புதிய பொருளும் ஏற்பட்டது. **இந்த இனத்தவர் இந்தியா வந்த பின்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**இங்கிருந்த இனத்தவரோடு - குறிப்பாக திராவிட இனத்தவரோடு - கலந்து இந்தியர் என்ற இனம் உருவாகிய பிறகு ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியர் என்ற இனம் உள்ளதே தவிர, 'ஆரியர்' என்ற தனி இனம் எதுவும் இல்லை.** ஆரியம் என்று சமஸ்கிருதத்தைத் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடும்போது அது மத்திய ஆசிய இனத்தவரும் திராவிடரும் கலந்த கலப்புச் சமுதாயமாக வடக்கில் வாழ்ந்த வட இந்தியரின் மொழியைக் குறிப்பிடுகிறதே தவிர ஆரியர் என்ற வெளி இனத்தினரின் மொழியாகக் குறிப்பிடப்படவில்லை என்பது உணரத்தக்கது. எனவே இங்கு ஆரியர் என்ற சொல்லைத் தவிர்த்து வைதிகம் என்ற சொல்லைப் பயன்படுத்த விழைகிறேன். ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு மேலாக பாரதம் முழுவதும் நிலைபெற்றுள்ள கலாச்சாரத்திற்கு அடிப்படையான வேதங்களுடைய வழியில் வந்த பண்பாடே வைதிகம் என்று கூறப்படும். இது வேதங்களை மட்டுமின்றி அதன் வழியில் தோன்றிய புராணங்களையும் அடிப்படையாகக் கொண்டது. தமிழில் இது வேத நெறி எனப்படும் (மேற்கோள் - 35). வைதிகம் தமிழ்நாட்டுக்கு வந்தது பற்றி அறிஞர்களால் கூறப்படும் கருத்துகளைக் காண்போம்.

தமிழகத்தில் வைதிகம் முன்பே வந்திருந்தாலும் அது பக்தி இலக்கிய காலத்தில்தான் செல்வாக்கு பெற்றதாகச் சிலர் கூறுவர். சங்க இலக்கியத்திலேயே சிவன், திருமால் வழிபாடு உள்ளதே என்றால் அப்போது அவை நிறுவனம் ஆக்கப்படவில்லை என்றும் கூறுவர். கிறிஸ்தவர்கள் திருச்சபை என்ற நிறுவனத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். முஸ்லிம்களும் அவ்வாறே தங்கள் மத நிறுவனத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால் இந்துக்கள் முன்பும் இப்போதும் எந்த நிறுவனத்துக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்லர். தற்காலத் தமிழ் இந்துக்களை சைவர், வைணவர் என்று பிரிப்பது கடினம். முன்பும் இப்போதும் சிவனையும், திருமாலையும். மற்ற தெய்வங்களையும் சேர்த்து வணங்குவதே இந்துக்களின் பொதுவான இயல்பு. எனவே இவ்வாறு நிறுவனம் என்ற கருத்தை சங்க கால நிலையுடன் பொருத்துவது முறையல்ல. சிவனுக்கு முதன்மை தரும் சைவமும், திருமாலுக்கு முதன்மை தரும் வைணவமும் வைதிக இந்து மதத்தின் இரு உட்பிரிவுகளே. 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க' ஞானசம்பந்தர் தோன்றியதாக பெரிய புராணம் கூறுகிறது. அதாவது வேதநெறி என்னும் வைதிகத்தின் ஒரு துறையாக - உட்பிரிவாக - சைவத்தை அது கூறுகிறது[35]. சிவனை மட்டுமே வணங்கும் வீர சைவமும் விஷ்ணுவை மட்டுமே வணங்கும் வீர வைணவமும் இடையில் ஏற்பட்டவை. அவ்வாறு பின்பற்றும் வைணவர் சிறுபான்மையர். அவ்வாறான வீரசைவர் தமிழ்நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

'சங்க காலத்தில் தமிழர் ஆரியச் சார்பற்று தனித்தன்மையுடன் விளங்கினர்; சங்க காலத்துக்குப் பின்பே ஆரியர் பெருந்தொகையினராக இங்கு குடியேறி ஆரியக் கருத்துகள் இங்கு நுழைந்தன' என்று சிலர் கூறுவர். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பாடநூலாக அமையுமாறு எழுதப்பட்ட, 'தமிழ் இலக்கிய வரலாற்றுச் சாரம்' என்ற நூலின் ஆசிரியர் த. ஜீவராஜா இவ்வாறு குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்டாகக் கூறலாம்[36]. தமிழின் பொருளிலக்கணம் தனித்துவமானது. வேறு மொழிகளில் இல்லாதது. அவ்வாறே தமிழின் யாப்பிலக்கணமும் தனித்துவமானது. ஆனால்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

சங்க இலக்கியம் வாயிலாக அறியப்படும் தமிழர் சமயம் என்பது இந்தியா முழுவதும் நிலவிய வைதிக சமயமே தவிர தனியான சமயம் அல்ல. மேலே காட்டப்பட்ட இலக்கியச் சான்றுகளில் இருந்து இந்நூலில் கூறப்பட்டுள்ள இந் தக் கூற்றுகளில் சிறிதளவும் உண்மை இல்லை என்பதை அறியலாம்.

சிலர் சங்ககாலத்தின் தொடக்கத்தில் ஆரியம் புகவில்லை ; சங்க காலத்தின் நடுவில் புகுந்து படிப்படியாக செல்வாக்கு அதிகரித்தது என்பர் . கரிகாலன் காலத்தில்தான் ஆரிய வருகை ஏற்பட்டு பின்பு ஆரியச் செல்வாக்கு கொஞ் சம் கொஞ்சமாக மிகுந்தது என்று கே . என். சிவராஜப்பிள்ளை கூறுவார்[37]. இந்த அடிப்படையில் வையாபுரிப்பிள்ளை[38] போன்றோர் ஒரு நூலில் எந்த அளவு ஆரியக் கலப்பு உள்ளதோ அந்த அளவு அந்த நூல் பிற்காலத்தது என அளவிடுவர் . சங்க நூல்களில் வடசொற்களும், வைதிகக் கருத்துகளும் குறைந்தவை முற்காலச் சங்க நூல்கள் என்றும் மிகுந்தவை பிற்காலச் சங்க நூல்கள் என்றும் பாகுபடுத்துவர் . இந்த விதத் தில் பரிபாடல் , கலித்தொகை, திருமுருகாற்றுப்படை, தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஆகியவை பிற்காலத்தவை என்று கூறுவர் . ஆனால் வைதிகம் சங்க காலத்தின் நடுவில் தமிழ்நாட்டுக்கு வரவில்லை . சங்க காலத்துக்கு பல நூற்றாண்டுகள் முன்பே வந்து தமிழ்ச் சமுதாயத்தில் ஒன்றிக்கலந்து நிலை பெற்றிருந்தது என்பதை மேலே கண்டோம் . மேலும் அகப்பொருள் பற்றிய ஒரு பாடலில் சமயக் கருத்துகள் அரிதாகவே இடம் பெறும். ஆனால் அதே காலத்தில் தோன்றிய ஒரு தெய்வ வழிபாட்டுப் பாடலில் அவை மிகுதியாக இடம் பெறும் . இதைக் கொண்டு அது பிற்காலத்தது என்பது தகாது . மேலும் பிற்காலத்தவை என்று கூறப்படும் நூல்கள் மற்றும் பாடல்களில் காணப்படும் கருத்துகளும் அவை சார்ந்த பிற கருத்துகளும் எல்லாத் தொகை நூல்களிலும் காணப்படுகின்றன . எடுத்துக்காட்டாக, பரிபாடலில் கூறப்படும் மாமர சூரபத்மனை அழித்த வைதிக புராணக்கதை புறநானூறு, பதிற்றுப்பத்திலும் கூறப்பட்டுள்ளது . வைதிக நரசிம்ம அவதாரம் பரிபாடலில் கூறப்படுகிறது. மற்றொரு அவதாரமான வாமன அவதாரம் முல்லைப்பாட்டு , பெரும்பாணாற்றுப்படை ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது (பார்க்க - புராணச்செய்திகள்). எனவே இக்காரணம் கொண்டு சில நூல்களைப் பிற்காலத்தவை என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல.

ஆரியத்தின் வருகை சங்க காலத்துக்கு மிகப்பின்பும் , சங்க காலத்துக்குச் சற்றுப் பின்பும் , சங்க காலத்தின் நடுவிலும் ஏற்பட்டதாகக் கூறப்படும் கருத்துக்களைக் கண்டோம் . அறிஞர் கைலாசபதி கி.மு 5 ஆம் நூற்றாண்டு அளவில் ஆரியத் தொடர்பு ஏற்பட் டதாக கருதுகிறார்[39]. அறிஞர் கே.கே. பிள்ளை கி.மு 6 - 4 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் ஆரியர் குடியேற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது திண்ணம் என்று கூறுகிறார்[40]. பாவாணர் கி .மு 1200 ல் ஆரிய வருகை ஏற்பட்டதாகக் கூறுகிறார்[41]. இவ்வாறு பற்பல அறிஞர்களும் பலவித க் கருத்துகளையும் பல்வேறு காலங்களையும் கூறுவதால் பலரும் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ற கருத்துகளை எடுத்துக் கொண்டு விருப்பப்படிக் கூறுகின்ற ஒரு நிலையைக் காணலாம் . மாணவர்களுக்கு இது எவ்வளவு குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதைக் கூற வேண்டியதில்லை . தன் இனத்தின் வரலாற் றைத் தமிழர்கள் தெளிவாக


http://Creativecommons.org//license/by/4.0/.

அறியமுடியாத குழப்பமான அவலநிலையே உள்ளது. வைதிகத்தின் வருகை தமிழகத்துக்கு எப்போது ஏற்பட்டது என்பது தெளிவாக அறியப்பட வேண்டிய ஒன்று.

மகாபாரத காலம் கி .மு 1000 என்று பல அறிஞர்கள் கருதுகின்றனர் . மகாபாரதத்துக்கு முற்பட்டது இராமாயணம். அதற்கும் முற்பட்டது மனுதர்ம நூல். அதற்கும் முற்பட்டவை வேதங்கள். இவற்றை நாம் அடிப்படையான அளவுகோல்களாகக் கருதலாம். வேத சம்ஹிதைகளில் தென்னிந்தியா பற்றிய குறிப்பே இல்லை என்பர். மனு தரும நூலில் தமிழர் பற்றிய குறிப்பு உண்டு . ஆனால் அவர்கள் வேதக் கலாச்சாரத்தைப் பின்ப ற்றாதவர்களாகக் கூறப்பட்டுள்ளனர் (மனு. 10.43-4). தமிழின் முதல் இலக்கண நூலாகக் கூறப்படும் அகத்தியத்தை இயற்றியர் வடநாட்டில் இருந்து வந்த பிராமண முனிவரான அகத்தியர் என்பது தமிழ் இலக்கியங்கள் ஒரு முகமாகக் கூறும் கருத்து . அதனால் அகத்தியர் காலத்திலேயே பிராமணக் குடியேற்றம் நடந்ததாக பொதுவான கருத்து உள்ளது.

வால்மீகி இராமாயணத்தில் சுக்ரீவன் வானரர்களைத் தென்திசைக்கு அனுப்பிப் பல நாடுகளில் சீதையைத் தேடச் சொல்லும் போது சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறான். மேலும் முத்து, இரத்தினங்கள் பதித்து பொன்மயமாய் விளங்கும் பாண்டியர் தலைநகர வாயில் பற்றிக் குறிப்பிடுகிறான். (இது கபாடபுரம் என்று கருதப்படுகிறது ). தமிழகப் பகுதியில் அகத்தியர் இருந்தது பற்றிய குறிப்பும் இராமாயணத்தில் உள்ளது [42]. அகத்தியரைப் பாண்டியரின் குலகுருவாக பாண்டியர் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன[43].

சோழர்கள் தாங்கள் பழைய முன்னோனான 'சோழன்' என்ற மன்னனின் வழிவந்தவர்கள் என்று தங்கள் செப்பேடுகளில் கூறுவது வழக்கம். அந்தச் சோழன் வேட்டையில் ஈடுபட்டபோது தன் தலைநகரில் இருந்து நீண்ட தூரம் தெற்கில் வந்தபோது காவிரி ஆற்றைக் கண்டு மகிழ்ந்து அதன் நீரை அமிர்தம் என உணர்ந்ததாக வும் அங்கே பிராமணர் யாரும் இல்லாததைக் கண்டு ஆர்யாவர்த்தத்தில் இருந்து சிறந்த பிராமணர்களைக் கொண்டுவந்து காவிரியின் கரையில் குடியமர்த்தியதாகவும் வீரராஜேந்திர சோழனின் கன்னியாக்குமரி கல்வெட்டு கூறுகிறது [44]. வீரராஜேந்திர சோழனின் சாரலச் செப்பேட்டிலும் இது கூறப்பட்டுள்ளது[45].

மகாபாரதத்தில், சகாதேவன் தெற்கு நாடுகளுக்கு திக்விஜயம் செய்த போது சோழ நாட்டில் காவிரிக்கரைப் பகுதியில் பல வேத முனிவர் ஆசிரமங்கள் இருந்ததாகவும் அப்பகுதிகளில் வேத, வேதாங்கங்களில் தேர்ந்த பிராமணர்கள் பலர் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது . பாண்டியன் மகள் சித்திராங்கதையை அர்ஜுனன் மணந்திருந்தான் . பாண்டியனும் சித்ராங்கதையும் அனுப்பிய பரிசுகளைப் பெற்றுக்கொண்ட சகாதேவன் அகத்தியர் இருப்பிடமான மலையைச் சென்றடைந்து வணங்கி தாமிரபரணியைக் கடந்து சென்றான் [46]. பாண்டவர் பக்கம் பாண்டியன் போரிட்டதாகக் மகாபாரதத்தில் குறிப்பு உள்ளது[47]. சேர அரசன் பாரதப் போரில் இரு திறத்தார்க்கும் உணவளித்ததாக புறநானூறு கூறுகிறது (புற-2:13-16).


http://Creativecommons.org//license/by/4.0/.

மேலே கண்டவை மூலம் இராமாயண காலத்திலேயே அகத்தியரால் வைதிகம் தமிழகத்துக்கு வந்தது என்று நாம் கொள்ளலாம் . ஆனால் அக்காலத்திலேயே தமிழகத்தில் வைதிகம் நன்கு பரவிவிட்டதா என்பதற்குச் சான்றுகள் போதுமானதாக இல்லை என்று தோன்றுகிறது . எனினும் மகாபாரத காலம் என்று கருதப்படும் கி .மு 1000த்துக்கு முன்பே தமிழ்நாட்டில் பிராமணர் நிறைய வாழ்ந்தனர் என்பதையும் வைதிகம் நன்கு நிலைபெற்றிருந்தது என்பதையும் தெளிவாக அறிய முடிகிறது.

**முடிவுரை:**

சங்ககாலத் தமிழர் சமயத்தைப் பற்றி பொதுவாகக் காட்டப்படும் சித்திரம் உண்மை நிலைக்கு எந்த அளவு மாறுபட்டு உள்ளது என்பதை மேலே கண்டவை உணர்த்தும் . மேலே கண்டவற்றைக் கொண்டு அறியும் முடிவுகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. அகத்தியரால் வைதிகம் தமிழகத்துக்கு வந்தது . மகாபாரத காலம் என்று கருதப்படும் கி .மு. 1000த்துக்கு முன்பே தமிழகத்தில் வைதிகம் நன்கு பரவிவிட்டது.
2. தமிழர்கள் வடக்கில் இருந்து வந்த வைதிகத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டனர் . அதை மிகவும் மதித்துப் போற்றினர். தற்காலத்தில் மேலைநாட்டார் கண்ட கணிப்பொறி முதலியவற்றை நாம் விரும்பி ஏற்றுக்கொள்வதைப் போலவே , வடவர் கண்ட இறையியலை பாரதத்தின் மற்ற மக்களைப் போலவே பழந்தமிழரும் விரும்பி ஏற்றுக்கொண்டிருந்தனர் . இந்தியா முழுவதும் பரவியிருந்த வேத, புராண இந்து சமயமே சங்க காலத்தில் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டது . அது தமிழகத்தில் நீண்ட காலத்துக்கு முன்பே நிலைபெற்றிருந்தது . அதைத் தவிர வேறான தமிழர் சமயம் எதுவும் பழந்தமிழ் நூல்களில் இல்லை.
3. தமிழகத்தில் குடியேறிய பிராமணர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் ஒன்றிக் கலந்துவிட்டனர் . அவர்களின் கல்வி , ஒழுக்கம் காரணமாக அவர்கள் உயர்வா க மதிக்கப்பட்டு பெரிதும் போற்றப்பட்டனர். தமிழ்ப் பொருளிலக்கணத்தில் இடம் பெறும் அளவு அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் ஒன்றியிருந்தனர். இந்நிலை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருந்தது . அவர்கள் மீது வெறுப்போ , பகையோ, அயலாராகவும், வந்தேறிகளாகவும் கருதும் தன்மையோ சிறிதும் இல்லை . அவர்கள் தமிழர்களையும் , தமிழ் மன்னர்களையும் ஏமாற்றியதாகவும் , தமிழையும் தமிழ் நூல்களையும் அழித்ததாகவும் , தீமை செய்ததாகவும் தற்காலத்தில் பலவாகக் கூறப்படும் கருத்துகளுக்கு ஆதரவாக எந்த ஒரு சான்றும் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தில் இல்லை. உண்மையில் ஆங்கிலேயர் வருகைக்கு முன் தமிழகத்தில் இத்தகைய கருத்துகள் எதுவும் அறவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது . எனவே இவை வெறுப்புணர்வினால் கூறப்பட்ட ஆதாரமற்ற கற்பனைகளே என்பது உணரத்தகும்.
4. கபிலர் முதலிய பிராமணப் புலவர்களின் பாடல்களுக்கும் மற்றவர்களி ன் பாடல்களுக்கும் வேறுபாடு காணமுடியவில்லை . வடமொழியை அவர்கள் திணித்ததாக சங்க நூல்களில் காணமுடியவில்லை.


http://Creativecommons.org//license/by/4.0/.

5. சங்க காலத்தில் தமிழகத்தில் வைதிக சமயமே முழுமையாகப் பரவியிருந்தது . சமண, பௌத்த சமயங்கள் அப்போதுதான் பரவத் தொடங்கின. ஆசீவகம் அறியப்படவில்லை.
6. உலோச்சனார் என்ற சங்கப் புலவர் சமணர் அல்லர்.
7. திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, பரிபாடல், தொகைநூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் ஆகியவற்றில் வைதிகக் கருத்துகள் மிகுந்திருப்பதால் அவை பிற்காலத்தவை என்று கூறப்படும் வாதம் முற்றிலும் ஏற்கத்தகாதது.
8. வைதிகக் கடவுள்களும் பழந்திராவி டக் கடவுள்களும் இணைக்கப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மை இருக்கக் கூடும் என்றாலும் அது வடநாட்டில் கி .மு. ஆயிரத்துக்கு முன் நடந்திருக்கக் கூடுமே தவிர சங்க காலத்தில் தமிழ்நாட்டில் நடந்ததாகக் கருதுவது பொருந்தாது.

உண்மை எதுவாக இருப்பினும் நம் விருப்பு , வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அதை ஏற்பதே அறம் ஆகும் . நம் பெருமைக்கு இழுக்கு என்று நினைத்து பொய்யான வரலாற்றை நாம் கூறிக்கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது மட்டுமின்றி உலகம் நம்மைப் பார்த்து நகைக்கவும் வழி செய்யும் . தம் உண்மையான வரலாற்றை அறியாமல் தம் விருப்பத்துக்கு ஏற்ப பொய் வரலாற்றை உருவாக்கி அதையே தம் மக்களை நம்பச்செய்யும் ஒரு சமுதாயம் ஒருபோதும் உயர்வடைய முடியாது என்பதை உணர்ந்து உண்மை வரலாற்றையே நாம் ஏற்க வேண்டும்.

**மேற்கோள்கள்:**

1. மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம், 1957, பக்.1, 3, 4, 10, 19, 21, 30, 32, 33, 44, 46, 49, 50, 53, 73, 81, 82, 84, 85, 88, 92, 117.
2. சாம்பசிவபிள்ளை, மா., திருநான்மறைவிளக்க ஆராய்ச்சி, 1926.
3. Kanakasabhai, V., The Tamils Eighteen hundred years ago, 1904, pp. 210, 230, 231, 232.
4. Ibid, pp. 227-228.
5. Ibid, pp. 231-232.
6. Ibid, pp. 231.
7. மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம், 1957, பக்.1, 3, 4, 10, 19, 21, 30, 32, 33, 44, 46, 49, 50, 53, 73, 81, 82, 84, 85, 88, 92, 117.
8. மறைமலையடிகள், தமிழர் மதம், 1941, பக். 8.
9. சுப்பிரமணிய பிள்ளை, கா., தமிழர் சமயம், 1940, பக். 49 - 61.
10. Sivarajapillai, K. N., The chronology of the early Tamils, 1932., pp. 9, 196, 261.
11. தேவநேயப் பாவாணர், தமிழர் மதம், 1972, பக். 67.
12. மேலது, பக். 69 -72,
13. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு - பகுதி -2, 2009, பக். 113- 116.
14. தேவநேயப் பாவாணர், தமிழர் வரலாறு - பகுதி -2, 2009, பக். 39-40.
15. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், 1999, பக். 8-9.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I

AUG – 2025 E-ISSN : 2584 – 1238

16. மேலது, பக். 14.
17. மேலது, பக். 7.
18. மேலது, பக். 15.
19. வானமாமலை, நா., தமிழர் பண்பாடும் தத்துவமும், 1973, பக்.12-13, 29, 200-202.
20. மேலது, பக். 7, 10.
21. கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் - வரலாற்றுப் புரிதலை நோக்கி (தமிழாக்கம்), 2003, பக். 20.
22. மேலது, பக். 25.
23. மேலது, பக். 114.
24. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், 2002, பக். 171.
25. மேலது, பக். 102-103.
26. நற்றிணை - ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, 2008, பகுதி 2 பக். 39 மற்றும் பகுதி 1 பக். 362.
27. பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியர் உரை, (ப-ர்) உ.வே. சாமிநாதையர், 1918, பக். 396, 286.
28. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு - பகுதி -1, பக். 173-174.
29. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - பால காண்டம், பி.எஸ்.கிருஷ்ணசாமி ஐயர் (மொ-ர்), 1940. சர்கம் 13: 13, 19.
30. Institutes of Parasara, (Tr) Krishnakamal Bhattacharyya, 1887, Sls. 1:17. 22, 24, 2:13.
31. The Vishnu Purana, (Tr) H H.Wilson, 1840, Book VI Chap.2.
32. ஸ்ரீமகாபாரதம் - சாந்தி பர்வம், கணபதி சாஸ்திரிகள் மற்றும் கிருஷ்ண சாஸ்திரிகள்,, 1915, அத். 85 பக்.288-289.
33. Arthashastra, R. Shamasastry (Tr), 1915, pp. 10, 60.
34. பெரிய புராணம், இளையான்குடிமாற நாயனார் புராணம்:1 மற்றும் வாயிலார் நாயனார் புராணம்:6.
35. பெரிய புராணம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம்:1.
36. ஜீவராஜா, த., தமிழ் இலக்கிய வரலாற்றுச் சாரம், 2009, பக். 15, 32.
37. Sivarajapillai, K. N., The chronology of the early Tamils, 1932, p. 196.
38. Vaiyapuri pillai, S., History of Tamil language and literature, 1956, p. 29.
39. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், 1999, பக். 7.
40. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், 2002, பக். 102-103.
41. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு - பகுதி -1, பக் 75.
42. ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம், (பதி-ர்) பி. எஸ். கிருஷ்ணசாமி ஐயர்,1940, சர்கம் 41: 12, 19. 20-21.
43. பாண்டியர் செப்பேடுகள் பத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1999, பக். 34, 117, 160-161,
44. Epigraphia Indica Vol.18, Archeological Survey of India, New Delhi, 1983, No.4, p.51.



http://Creativecommons.org//license/by/4.0/.

45. மகாதேவன், வே. சோழர் செப்பேடுகள், 2013, பக்.964-965.
46. ஸ்ரீமகாபாரதம் - சபா பர்வம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாரியார் (மொ-ர்), 1910, பக். 114-116.
47. ஸ்ரீமகாபாரதம் - உத்யோக பர்வம், கிருஷ்ண சாஸ்திரி (மொ-ர்), 1937, அத். 19 பக். 54-55.

**துணை நூல் பட்டியல்:**

1. எட்டுத்தொகை நூல்கள்.
2. கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் - வரலாற்றுப் புரிதலை நோக்கி (தமிழாக்கம்), மக்கள் வெளியீடு, சென்னை, 2003.
3. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1999.
4. சண்முகம் பிள்ளை , மு., சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் , உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.
5. சாம்பசிவபிள்ளை, மா., திருநான்மறைவிளக்க ஆராய்ச்சி , ஜெகம் & கோ, டாட்சன் பிரஸ், திருச்சிராப்பள்ளி, 1926.
6. சுப்பிரமணிய பிள்ளை, கா., தமிழர் சமயம், வெளியீடு: வெ. சண்முக முதலியார், வாணியம்பாடி, 1940.
7. தேவநேயப் பாவாணர், தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி, 1972.
8. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு - பகுதி -1, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, 2009.
9. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு - பகுதி -2, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, 2009.
10. நற்றிணை - ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, பகுதி - 1 மற்றும் 2, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008.
11. பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியர் உரை, (ப-ர்) உ.வே. சாமிநாதையர், கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 1918.
12. பத்துப்பாட்டு நூல்கள்.
13. பாண்டியர் செப்பேடுகள் பத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், (மறு அச்சு), சென்னை, 1999.
14. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.
15. பெரிய புராணம்.
16. மகாதேவன், வே.,சோழர் செப்பேடுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.
17. மறைமலையடிகள், தமிழர் மதம், திருமுருகன் அச்சுக்கூடம், பல்லாவரம், 1941.
18. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் - பகுதி-1, தி.தெ.சை.நூ. கழகம், திருநெல்வேலி, 1930.
19. மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம், தி.தெ.சை.நூ. கழகம், திருநெல்வேலி, 1957.


http://Creativecommons.org//license/by/4.0/.

20. வானமாமலை, நா., தமிழர் பண்பாடும் தத்துவமும் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1973.
21. வானமாமலை, நா., தமிழர் வரலாறும் பண்பாடும் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1966.
22. ஸ்ரீமகாபாரதம் - சபா பர்வம் , (மொ-ர்) தி.ஈ. ஸ்ரீநிவாஸாரியார், (பதி-ர்) ம.வீ. இமாநுஜாசாரியார், சென்னை, 1910.
23. ஸ்ரீமகாபாரதம் - உத்யோக பர்வம் , (மொ-ர்) கிருஷ்ண சாஸ்திரி , (பதி-ர்) ம.வீ. இமாநுஜாசாரியார், சென்னை, 1937,
24. ஸ்ரீமகாபாரதம் - சாந்தி பர்வம், (மொ-ர்) கணபதி சாஸ்திரிகள் மற்றும் கிருஷ்ண சாஸ்திரிகள், (பதி-ர்) ம.வீ. இமாநுஜாசாரியார், சென்னை, 1915,
25. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - பால காண்டம், பி.எஸ். கிருஷ்ணசாமி ஐயர் (மொ-ர்), சுப்ரமணிய வாத்தியார் மற்றும் மகன்கள் (பதி-ர்), பாலக்காடு, 1940.
26. ஸ்ரீமத் வால் மீகி இராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம் , பி.எஸ். கிருஷ்ணசாமி ஐயர் (மொ-ர்), சுப்ரமணிய வாத்தியார் மற்றும் மகன்கள் (பதி-ர்), பாலக்காடு, 1940.
27. ஜீவராஜா, த., தமிழ் இலக்கிய வரலாற்றுச் சாரம், அல்வாய் - இலங்கை, 2009.
28. Arthashastra, R. Shamasastry (Tr), Government Press, Bangalore, 1915.
29. Buhler, G. (Tr), The Laws of Manu, Sacred Books of the East series Vol. 25, London, 1886.
30. Epigraphia Indica Vol.18, Archeological Survey of India, New Delhi, 1983
31. Institutes of Parasara, (Tr) Krishnakamal Bhattacharyya, Asiatic Society of Bengal, Culcutta, 1887.
32. Kanakasabhai, V., The Tamils Eighteen hundred years ago, Asian Educational Services, New Delhi, 1904.
33. Sivarajapillai, K. N., The chronology of the early Tamils, University of Madras, Chennai, 1932.
34. The Vishnu Purana, (Tr) H H.Wilson, (Pub) John Murray, Oxford, 1840.
35. Vaiyapuri pillai, S., History of Tamil language and literature, New Century Book House. Chennai, 1956.

***



http://Creativecommons.org//license/by/4.0/.